முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 13—8—57 | வெள்ளி | ஒலி 21

நீட்டோலை

மு.கருணாநிதி

அன்புள்ள பொன்முடி!

'வியர்வையின் வெற்றி' சென்ற வாரமே கிடைத்திருக்க வேண்டும். கண்ணீரின் ஊற்றில் தமிழகமே மிதந்திடும் நிலையல்லவா ஏற்பட்டது! வியர்வையின் வெற்றி கண்டு பூரிப்பு தவழும் முகத்துடனே வீடு தேடி ஓடிவந்து பாராட்டுரைகள் குவிக்கும் கலைவாணர் இன்றில்லை அவர் பரப்பிய கருத்து நாட்டிலே வளர்கிறது. வீட்டிலோ "உத்திரகிரியை" நடத்துகிறார்கள் அவருக்கு!

அவர் இருந்திருந்தால் நங்கவரம் வெற்றி கண்டு குதித்திருப்பார். அவரிடம் விடை பெற்றுக் கொண்டுதான் மருத்துவமனையிலிருந்து நேராக நங்கவரம் புறப்பட்டேன். வெற்றிச் சேதியைச் சொல்ல அவரில்லை—காவிரியிலும் கங்கையிலுமாக அவர் கரைக்கப்பட்டுவிட்டார்.

நங்கவரம் வெற்றிக்கு எத்தனை யெத்தனை இடையூறுகள் இருந்தன என்பதை நீ நன்றாக அறிவாய்.

பண்ணையார்கள் போருக்குத் தயார் என்றார்களே தவிர, கருணை காட்டுகிறோம் எனக் கூறிடவில்லை; கண்ணீரை மதித்திடவில்லை.

அமைச்சர்களோ அலட்சியம் காட்டினர். அறப்போர் ஆரம்பமான பிறகு ஊருக்கு ஊர் மேடைப் போரைத் துவங்கினர்.

நாள் ஏடுகளோ நங்கவரம் செய்தியைத் திரித்துக் கூறுவதில் ஒருவகைத் திருப்தி அடைந்தன. சுற்று வட்டாரத்து "சுமைதாங்கிகள்" சில, வாங்கிய கூலிக்கு அநாமதேய அறிக்கைகளை வெளியிட்டு வீரத்தைக் காட்டிக் கொண்டன.

திராவிட விவசாயிகள் சங்கம் நடத்துகின்ற பண்பாளர்கள், நமது போராட்டத்தைக் குறை கூறினர்.

குறுகிய மதியினர் சிலர், இது ஆரிய திராவிடப் பிரச்சனை—யென எழுதி மகிழ்ந்தனர். பேசி முடித்தனர்.

தேர்தல் தந்திரம்—என்றார் பெரியார்!

தெரியுமா இவர்களுக்குப் போராட்டம் நடத்த—என்றார் பக்தவத்சலம்!

விவசாயிகளைப் பற்றி கருணாநிதிக்கு என்ன வந்தது—என வெகுண்டார் நிதி அமைச்சர்!

"யார் பெரியவர்?" என எடை போட்டார் காமராசர்! போராட்டம் பிசுபிசுத்தது என்றனர்! தோற்றது எனத் தோள் தட்டினர்! எல்லோருக்கும் ஒரே பதில் தரும் விதத்திலே நங்கவரம் அறப் போர் வெற்றி பெற்றது!

திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலாக விவசாயிகள் பிரச்சினையில் நேரடியாக ஆதரவு தர முற்பட்டு, முதற்படியிலேயே முழு வெற்றியைப் பெற்றிருக்கிறது.

முழு வெற்றி என்று நான் குறிப்பிடுவது; விவசாயிகளின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவே; அதையல்ல!

உழவர்களை அணி வகுத்துத் தமிழ் நாட்டில் நடத்திய போராட்டங்களில் இதைப் போல் அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் எந்தப் போராட்டமும் நடைபெற்றதில்லை யென்பதைப் போலீஸ் அதிகாரிகளே கூட வியந்து பாராட்டினார்கள்.

வயிற்றுக்கு இல்லை. அதோடு வயலில் இறங்கி வேலை செய்து பிழைக்கவும் உரிமையில்லை. அதுமட்டுமல்ல; உரிமையுள்ள நிலத்தில் எங்கிருந்தோ வந்த கருங்காலி பணிபுரிகிறான்.

இந்தக் கொடுமையை நேரிலே அனுபவித்தபோதும் உழவன் அமைதியை இழக்கவில்லை. தன்னை நடத்திச் செல்பவர்கள் மீது நம்பிக்கை வைத்து எல்லா வித தியாகங்களுக்கும் தயாராகி அறப் போரில் குதித்துவிட்டான.

போர், வெற்றி பெற்றுவிட்டது! யாரை எதிர்த்து?...... நாடு பாதி; நங்கவரம் பாதி யெனப் புகழப்படும் பெரிய பண்ணைக்காரரை எதிர்த்து! அவருக்கு மட்டுமே பாதுகாப்பு அளிக்கப் புறப்பட்ட அரசினரை எதிர்த்து!

இத்தனைக்கும் நம்மிடமிருந்த பலம் எவ்வளவு?

அங்கே தோள் வலி மிக்கோரின் கையிலே துப்பாக்கிகள்!

இங்கே தொங்கிய முகத்துடன் தொய்வு விழுந்த வயிற்றுடன் காட்சி தரும் உழவர்கள்!

அங்கே பணப் பேழை!

இங்கே போராட்டச் செலவுக்கு நிதி குவிந்தது மொத்தமே ஆயிரத்து முன்னூற்றிப் பத்து ரூபாய்- அதிலே செலவானதோ எண்ணூறு போக மீதி ஐநூறு இருக்கிறது.

அவர்கள் பக்கம் தேசிய ஏடுகள்—நாள்தோறும் விஷமச் செய்திகளைப் பரப்பிவந்தன.

※ 6-ம் பக்கம் பார்க்க

வியர்வையின் வெற்றி!

கற்பனை உரையாடல்

மொழி அன்னைகளின் மாநாடு!

[இந்திய மக்களனைவரும் குழுமியுள்ள அலங்காரப் பந்தலில், மிக உயரமான மேடை மீது எல்லா நாட்டு மொழி அன்னைகளும் கூடியிருக்கிறார்கள். எல்லோரையும்விடத் தமிழன்னை மிகமிக எளிமையானத் தோற்றத்துடனும், தலைவிரி கோலமாகக் காட்சியளிக்கிறாள். மிகமிக ஆடம்பரமாகப் பட்டாடை யணிந்து பகட்டாகக் காட்சியளிக்கிறாள், இந்தி அன்னை. அவளது முகத்திலே அலட்சியக் குறியும் அகம்பாவத் தொனியும் பிரதி பலிக்கிறது. அந்த மாநாட்டிற்கு ஆங்கில அன்னை தலைமை வகிக்கிறாள். தமிழன்னையின் பேச்சைத் தவிர. மற்ற அன்னைகளின் பேச்சுகளுடைய தமிழ்மொழி பெயர்ப்பு கீழே தரப்படுகிறது.]

ஆங்கில அன்னை : (டியர் சிஸ்டர்ஸ்!) அன்புமிக்க சகோதரிகளே! குழந்தைகளே! என்னைப் பற்றி நானே தற்பெருமையாகப்புகழ்ந்துபேச விரும்பவில்லை! ஆனால் ஒன்றே ஒன்றுமட்டும் கூற விரும்புகிறேன்! இனி என்னைப் புறக்கணித்த நாடு ஒரு நாளும் முன்னேற்றமடைய இயலாது! உலகம் முழுவதும் பொது மொழியாக நான் விளங்குகிறேன்! என்னிடத்திலே ஏராளமான கலைச் செல்வங்கள் இருக்கின்றன! மற்ற என் சகோதரிகளிடம் உள்ள செல்வங்களை யெல்லாம் ஒன்று திரட்டினாலும் என்னுடைய செல்வத்தின் ஒரு துளிக்குக்கூடச் சமமாகாது! எனவே நான் கலைச் செல்வங்களைக் கோடிக் கணக்காகப் பெற்ற பணக்காரி! ஆகவேதான் கூற விரும்புகிறேன், "ஆங்கிலத்தைப் புறக்கணித்து அழிந்து போகாதீர்கள்!" என்று! என்னை நீங்கள் புறக்கணிப்பதாலோ அல்லது ஆதரிப்பதாலோ எனக்கு ஒரு துளி நன்மையும் ஏற்படப்போவதில்லை! ஆனால் உங்கள் நலனைக் கருதியே நான் இதைக் கூறுகிறேன்! என்னைப் புறக்கணிக்கும் எந்த நாடும் இனி முன்னேற முடியாது! எனவே இந்தியாவும் என்னை ஆதரித்து தன்னை உயர்த்திக் கொள்ளுமாக!

இறுதியாக இந்தி அன்னை தலைமை வகிப்பதாக இருந்த இந்த மாநாட்டிலே எனக்குத் தலைமை தாங்க வாய்ப்பளித்த இம் மாநாட்டின் செயலாளருக்கு என் உளங்கனிந்த நன்றி! என் இடத்தைப் பிடிக்க அல்லும் பகலும் அயராது பாடுபடும் இந்திச் சகோதரியை உங்கள் முன்னால் பேச அழைக்கிறேன்! தாங்க்ஸ் யூ ஆல்!

[பகட்டான பட்டாடை பளபளக்க, மெல்லிய முகத்திரையை விலக்கி விட்டுக் கொண்டு மேடை மீதேறுகிறாள், இந்தி அன்னை!]

இந்தி அன்னை: (ப்யாரி பஹனே!) அன்பான சகோதரிகளே! எனக்கு முன் பேசிய ஆங்கிலச்சி இருபொருள்படப் பேசினாள் சிறிது திமிராகவே! அவள் பேசியதை நீங்களனைவரும் கவனித்திருப்பீர்கள்! நான் அவளது இடத்தைப் பிடிக்க அல்லும் பகலும் அயராது பாடுபடுகிறேனாம்!...நீங்களே கூறுங்கள்! இது எவ்வளவு கர்வமானப் பேச்சு? ...[சில வடநாட்டு இந்துஸ்தானியர்கள் கை தட்டுகிறார்கள்.] என்னவோ உலகத்தில் தன் ஆதிக்க சக்தியினால் தன் மொழியைப் பரப்பி விட்டதனாலும், எல்லா மொழிகளில் உள்ள சிறந்த நூல்களை மொழிபெயர்த்து விட்டதாலும், துடுக்காகத் தன்னைப் "பணக்காரி" எனக் கூறி ஜம்பமடித்துக்கொள்கிறாள்!

பேசுவதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? தலைகால் தெரியாமல் இப்படியா கிடந்து துள்ளுவது? ['மரியாதையாகப் பேசு! நாக்கை அடக்கிப் பேசு!' என்ற குரல்கள் கூட்டத்தில் எழுகின்றன.]

ஆமாம்! நான் கேட்கிறேன். இவள் யார் இங்கே தலைமை தாங்க? இவள் யார் இந்தியாவுக்குப் புத்திமதி கூற? என்ன இருந்தாலும் இவள் அந்நிய நாட்டவள்தானே!

['நீயும் அன்னிய நாட்டவள் தான்!' என்ற தமிழர்களின் குரல்கள் ஒலிக்கின்றன. கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்கின்றனர்.]

என்ன?...நானா அந்நிய நாட்டவள்?

["ஆமாம்......ஆமாம்! அதில் சந்தேகமென்ன இருக்கிறது? சிட் டவுன்! பேசாமல் உட்கார்!" என்ற குரல்கள் எழுகின்றன. கூட்டத்தில் குழப்பம் உண்டாகிறது. இதனால் கோபமடைந்த இந்தியன்னை மேசையைத் தட்டுகிறாள். அப்பொழுது அவளது மெல்லிய முகத்திரையைக் காற்று அடித்துச் செல்கிறது! கூட்டத்தினர் மேலும் கூச்சலிடுகின்றனர்!]

...ஊம்...என் அழகைக் கண்டு மட்டும் சிரிக்கிறீர்கள்! கூச்சல் போடுகிறீர்கள்! நான் கூறுவதைக் கவனிக்கவில்லையே!......இனி நீங்கள் யாரும் இந்தி கற்காவிட்டால் முத்திய சர்க்கார் வேலைகள் கிடைக்காது! இரயில்வே வேலை கிடைக்காது! தபால்—தந்தி வேலைகள் கூடக் கிடைக்காது!...ஏன், மாநில சர்க்காரிலேகூட இந்தி கற்றவர்களுக்குத்தான் சலுகையளிக்கப்படும்! அது மட்டுமா? தபால் கார்டு, கவர், தபால் தலை......போன்றவைகளை அலங்கரித்த இந்தி மொழியிலேதான், இனி அரசாங்க அறிக்கைகள் வெளியிடப்படும்! அதிலேதான் சுப்ரீம் கோர்ட் நிகழ்ச்சிகள் அச்சிடப்படும்! அதுமட்டுமல்ல; இனி இந்தியிலேதான் தந்தியடிக்க வேண்டிவரும்! மேலும் உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்விகூட இந்தியிலே வந்தாலும் வரலாம்!... எனவே எல்லாம் இந்தி மயம்!.......ஆகையினால்தான் அகம்பாவிகளே! அசடுகளே! அறிவற்றவர்களே! மொழி வெறியர்களே! என்னைப் புறக்கணிக்காது ஆதரிப்பீர்! இன்றேல் அழிந்துபடுவீர்!

[அவ்வளவுதான்! ...கற்களும் மிதியடிகளும் மின்னல் வேகத்தில் பறந்து வருகின்றன!...இந்தி அன்னை ஓடி மறைகிறாள்!...]

ஆங்கில அன்னை : அமைதி! அமைதி! அடுத்தபடியாக உலகிலேயே நயமிக்க, அழகான, தொன்மைமிக்க, தேனினுமினிய, எல்லா மொழிக்குமில்லாத 'ழ' கரத்தைச் சிறப்பாகத் தன்னிடம் கொண்ட இலக்கிய வளங்கள் மிக்க, அருமையான இலக்கணம் உடைய தமிழ் மொழியின் தாய் உங்கள் முன் தோன்றி தன் இனிமையான மொழியிலே இன்பமளிக்கப் போகிறாள்! இன்பத் தேன் வந்து உங்கள் காதுகளிலே பாயப் போகிறது! அமைதியாக இருந்து தமிழ்த்தாயின் பேச்சைக் கேட்கவேண்டுகிறேன்.

தமிழ்த் தாய் : அன்புமிக்க உடன் பிறந்தாரே! அருமைக் குழந்தைகளே! என்னை ஆங்கில அன்னை பல படப் புகழ்ந்து பேசினார்கள்! நான் அந்தப் புகழ்ச்சிக்குத் தக்கவளோவென ஐயுறுகிறேன்! ஆனால் என் நாட்டவர்களே என்னை இழிவாகப் பேசி, என்னை அழித்துவிட நினைக்கிறார்கள்! என் புதல்வர்களே என்னைக் கொலை செய்யும் பரசுராமர்களாக அவதரித்துள்ளார்கள்! என்னை அழிக்க ஒரு காலத்தில் வடமொழி முயன்றது! மணிப் பிரவாள நடையிலே எழுதித் தாய்க் கொலை புரிந்தனர்! ஆனால்... என் அழகு அழிந்துவிடவில்லை! என் கற்பு நெறியை மாசு படுத்த இயலவில்லை! என் மதிப்பும் மங்கி விடவில்லை! தமிழ்மொழி பேசும் மக்களின் தொகைதான் குறைந்தது! ...... இன்றேல் இன்று திராவிடநாடு முழுவதும் தமிழ் மொழியன்றோ முழங்கும்! அப்படித் திராவிடம் முழுவதும் தமிழ் பேசப்படுமானால் தமிழை அந்நியப் பொதுமொழியாக ஆக்கி யிருக்கமாட்டார்கள்!

மேலும், இந்தி பேசும் மக்களனைவரும் ஒரேவித மொழியைப் பேசவில்லை! இந்தியிலே பலப்பல பிரிவுகள் உள்ளன. தேவநாகரி எழுத்துக்களால் எழுதப்படும் இந்தி; உருது எழுத்தால் குறிக்கப்படும் இந்தி; வடமொழி கலந்த இந்தி; தனி இந்தி—இதைப் போன்று பலவாறாகப் பிரிக்கலாம்! இந்தியைப் பொது மொழியாக்கக் கூறிய காந்தியார்கூட இந்தியைப் பற்றி "இந்தி என்கின்ற பெயர் அசலானதல்ல! இந்தப் பெயர் முஸ்லீம்களாலேயே அந்த மொழிக்குச் சூட்டப்பட்டது!" எனக் கூறுகிறார். அவரே, மற்றோர் இடத்தில் "மத வேற்றுமைகளை மறந்த பிறகே நாம் பொது மொழிப் பிரச்சினையை ஆராய முனைய வேண்டும். ஒரு லிபியையோ, அல்லது ஒரு சார்பான இந்தியை மட்டுமோ பலவந்தமாக எந்த மாகாணத்திலும், அல்லது எந்த மாவட்டத்திலும், அல்லது எந்த மக்களிடையிலும் திணிக்க முயல்வது தேச நன்மைக்கே பெருங்கேடு விளைவிப்பதாகவே முடிந்துவிடும்.....பொது மொழியைப் பரப்ப வேண்டும் என்பதின் நோக்கம், மாகாணங்களுக்கிடையில் நல்ல தொடர்பு ஏற்படுத்துவதை முன்னிட்டே ஆகும்!" எனவே அந்தத் தொடர்பை இன்றைய நிலையில் ஆங்கிலம் மூலமே அடைய இயலும்! இந்தி மூலம் சிக்கலையும், பூசலையும், விரோத மனப்பான்மையையும்தான் உண்டாக்கலாம்!

இறுதியாக, இந்தி ஒரு கலப்பு மொழி; இலக்கிய வளமற்ற மொழி; இலக்கண வரம்பற்ற மொழி! இந்தியிலே

✻ 8ம்-ம் பக்கம் பார்க்க

போர்வாள்

கலைவாணர் என். எஸ். கிருட்டிணன் நினைவு மலர்

14—9—57 போர்வாள் இதழ் மலராக வெளிவருகிறது.

முழு வாழ்க்கை வரலாறும் 100-க்கு மேற்பட்ட படங்களும் உள்ளன.

60 பக்கம் விலை அணா 12

போர்வாள், 128, பிராட்வே, சென்னை—1



வெள்ளி 13—9—57 சென்னை

வேண்டாம் உபதேசம்!

எந்த ஆட்சியிலே சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு குறைந்திருக்கிறதோ அந்த ஆட்சிதான் மக்கள் மன்றத்திலே மங்காப் புகழ் பெற்று; நிறைமதிபோல் நீடுவாழ முடியும்!

அஸ்வான் அணை கட்டுவதற்கு அமெரிக்கா உதவி செய்யாவிடில் சூயஸ் கால்வாயை அரசாங்கமே ஏற்று நடத்தும்; அதன் வருவாயைக் கொண்டு அணையைக் கட்டி முடித்து; எகிப்தின் வளத்திற்கு ஏற்றதோரு வழி காண்பேன்—என்று கொக்கரித்தான் நாசர்!

—பிரிட்டிஷ் சிங்கமே எதிர்த்துக் கர்ஜனை செய்தபோதிலும்; ஏகாதிபத்திய நாடுகளின் ஆகாய விமானங்களே குண்டுமாரி பொழிந்தபோதிலும் செயலில் இறங்கிய நாசரை நாசம் செய்ய முடியவில்லை!

—அதனால்தான் கர்னல் நாசர் இன்று அராபிய இனத்தவரிடையே முடிசூடா மன்னராக விளங்கக் காணுகிறோம்!

ஆனால் இந்த நாட்டிலோ கோலோச்சுபவர்கள் மறந்தும் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்ற நினைப்பதாகத் தெரியவில்லை.

நாங்கள் பதவிக்கு வந்தால் தெருவெல்லாம் தேனும் பாலும் வழிந்து ஓடும்—என்று அவர்கள் அன்று கூறியதை மட்டும் நாம் இங்கு கூறவில்லை. இன்றும் நிலைமை சீர்திருந்தியதாகத் தெரியவில்லை.

“கள்ள மார்க்கெட்காரர்களை யெல்லாம் கண்டு பிடித்துத் தூக்கிலேற்றுவோம்!”

—இதுவும் பதவி தேடுவதற்கு முன்பு காங்கிரஸ்காரர்கள் கூறிய உறுதிமொழிதான்!

ஆனால் இன்றோ, கள்ள மார்க்கெட் நடத்திக் கொள்ளையடித்தவர்களாலும், கனதனவான்களினாலுமே காங்கிரஸ் ஆட்சி பம்பரம்போல் சுழற்றிவிடப்படுவதைக் காணுகிறோம்!

இதே போலத்தான் உணவுப் பிரச்சினையும்!

“உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பவர்களுக்குக் கண்ணை மூடிக்கொண்டு கடுமையான தண்டனை வழங்கப் போகிறோம்! அதனால் பதுக்கல் வியாபாரிகளே! உடனடியாக உங்கள் கையிருப்பைச் சந்தைக்குக் கொண்டு வாருங்கள்!”

—கொக்கரித்தார், டெல்லி பாராளு மன்றத்திலே உணவு அமைச்சர்!

இந்தப் பேச்சு வழக்கம்போல் வெறும் மிரட்டலாகத்தான் இருந்ததே தவிர பலன் எதுவும் அளிக்கக் காணோம். எந்த வியாபாரியும் நாட்டிலே தாண்டவமாடும் உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகத் தங்கள் கையிருப்பை மார்க்கெட்டிற்குக் கொண்டு வரக் காணோம்!

—ஏனெனில் தங்களுக்கெதிராக அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். இதற்கு முன்பு எப்போதாவது ஒருமுறை எடுத்திருந்தால் அல்லவோ அவர்கள் பயப்படுவதற்கு! அதனால்தான் யானையின்மீது எறியப்படும் சுண்டைக்காய் போல் ஆகிவிட்டது, பதுக்கல் வியாபாரிகள்மீது உணவு அமைச்சர் ஏவி விட்ட மிரட்டல் என்னும் பாணம்!

அதே போன்ற—ஆனால் அதைவிட இன்னும் பயங்கரமான நிலைமை ஒன்று இப்போது உருவாகியிருக்கிறது!

மக்களது இன்றியமையாத சமையற் பொருளாக இருக்கிற துவரம் பருப்பிலே ‘கேசரிப் பருப்பு’ என்று வழங்கப்பட்டுவரும் ஒரு புதுவித பருப்பு வகையை கலப்படம் செய்கிறார்களாம்.

பாலிலே தண்ணீர் கலப்படமாவதால் பாலின் தன்மைதான் பழுதுறுகிறதே தவிர, உடலுக்கு அதிகத் தீங்கு நேரிடுவதில்லை! வெண்ணெய்; நெய் போன்ற பதார்த்தங்களில் செய்யப்படும் கலப்படமும் இப்படித்தான்—உடலுக்கும் உயிருக்கும் அதிகத் தீங்கு விளைப்பது கிடையாது!

ஆனால் துவரம் பருப்பில் கலக்கப்படும் இந்தக் கேசரிப் பருப்போ உடலுக்கு ஊறு செய்யும் நஞ்சைக் கொண்டதாக இருக்கிறது!

‘வட்டப் பருப்பு’ என்கிற புனைப்பெயர் கொண்ட இந்தப் பதார்த்தம் இளஞ் சிகப்புடன் கூடிய மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கிறதாம்; தோற்றத்தில் துவரம் பருப்பைவிட்டுச் சிறு மாறுபாடு கொண்டதாகக் காணப்படுமாம்!

இந்தக் ‘கேசரி’யைப் பற்றி ஏடொன்று எழுதியிருக்கிறது:

“இதைக் குறைந்த அளவில் எப்பொழுதோ ஒருமுறை உபயோகித்தால் வயிற்று வலியும், ஜீரணக் கோளாறுகளும் ஏற்படும். இதையே முக்கிய உணவாக நீண்டகாலம் உட்கொண்டால் பயங்கரமான பாரிசவாதம் உண்டாகிறது. இருந்தாற்போல் இருந்து இரண்டு கால்களும் திடீரென்று பலமிழந்து சோர்ந்துபோய் துவண்டு விடும் இந்தப் பயங்கர வியாதியைக் குணப்படுத்த இதுவரையிலும் எந்தச் சிகிச்சையும் பயன்படவில்லை. ஆகவே, எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும், படுத்த படுக்கையாகக் கிடந்து நரக வேதனையை அனுபவிக்க வேண்டியதுதான்!”

—நஞ்சுக்கு நிகரான இந்தக் ‘கேசரி’யை நஞ்சைவிடக் கொடிய வியாபாரிகள் பருப்போடு கலந்து விற்பனை செய்கிறார்களாம்!

—இவ்வளவு அபாயம் நிறைந்த ‘கேசரி’ பொதுமக்கள் உபயோகிக்கும் உணவுப் பொருளோடு கலந்து விடாமல் இருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

இந்தக் கேசரியைத் தடை செய்ய முன்வராமல் பொதுமக்களை நோக்கி, இந்தக் ‘கேசரி’யை உபயோகிக்காதீர்கள்—என்று வேண்டுகோள் விடுப்பதோடு நின்று விட்டது, அரசாங்கம்!

ஆபத்து நிறைந்த இந்தக் ‘கேசரி’யை மற்ற உணவுப் பொருள்களோடு கலப்பதை மட்டுமல்ல; இந்தக் கேசரி நாட்டின் எந்த மூலையில் பயிரிடப்பட்டாலும் அதைத் தடை செய்ய முன்வர வேண்டும், அரசாங்கம்!

தீங்கு விளைவிப்பதில்; நாட்டவர் உடலிலே நஞ்சு சேர்ப்பதில் திடகாத்திரம் மிக்கவர்களைத் தீராத நோய்க்கு ஆளாக்குவதில் கஞ்சாவுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல இந்தக் கேசரி!

கஞ்சாவாவது உபயோகிப்பவர்களை மட்டும் உபாதைக்குள்ளாக்கும்! ஆனால் கேசரியோ—திறமையான வணிகர்களால் இதர உணவுப் பொருள்களோடு கலக்கப்பட்டால் எதுமறியாத பொதுமக்களையும் பொல்லாத வியாதியில் வீழ்த்திவிடும் தன்மை கொண்டது.

அதனால் கஞ்சாச்செடி பயிரிடப்படுவதை தடை செய்து தண்டிக்கும் அரசாங்கம் ‘கேசரி’ விஷயத்திலும் தக்க தருணத்தில் விழித்தெழுந்து; அந்த விஷப் பயிரைப் பூண்டோடு அழிக்க முன்வர வேண்டும்!

இதை விடுத்து; மயிலிடம் இறகு கேட்பதைப்போல வியாபாரிகளை நோக்கி ‘கேசரி’யைக் கலக்காதீர்கள் என்று கேட்பதும்; எதுமறியாத பொதுமக்களிடம் உணவுப் பண்டங்களைப் பார்த்து வாங்குங்கள் என்று உபதேசிப்பதும் இந்த ஆபத்தினை எந்த விதத்திலும் தடுத்து நிறுத்தி விடாது.

இப்போதுள்ள நிலைமையில் கேசரியைப் பயிரிடுவது தடுக்கப்படவில்லை.

வணிகர்களோ கேசரியைக் கலப்பதால் லாபம் பெருகுகிறது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

—இதற்கிடையில் அரசாங்கத்தின் உபதேசமோ; அல்லது அதிகாரம் கலந்த வீண் மிரட்டலோ என்ன பலனளிக்க முடியும்?

சில தினங்களுக்கு முன்னர் நாட்டைக் கௌவியிருந்த விஷஜுரத்தைப் பரவாமல் தடுப்பதற்கு அரசாங்கம் எப்படிக் கடமைப்பட்டிருந்ததோ, அதே கடமையுணர்ச்சி கேசரிக் கலப்படத்தைத் தடுப்பதில் மட்டுமல்ல—கேசரி பயிர் செய்யப்படுவதைத் தடுப்பதிலும் இருக்க வேண்டும் என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

★★★

பண முதலைகளின் பம்பரம் பண்டிதர் ஆளும் அரசாங்கம்!

“நாங்கள் பணக்காரர்களை ஒழித்துக் கட்டப்போகிறோம்!”

“மகாராஜாக்களை; சமஸ்தானங்களை — ஒழித்து விட்டோம்! எங்களது அடுத்த குறி பணக்காரர்கள்தான்!”

—இப்போது இப்படிப் பேசி வருகிறார், சென்னை முதலமைச்சர் காமராசர்!

அவர் மட்டுமா? டில்லி நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்கூட இதே ராகத்தில்தான் தற்போதைய அரசியல் பாடல்களை மேடை தோறும் பாடி வருகிறார்!

—ஆனால் இதர முற்போக்கு இயக்கங்கள் பண முதலைகளை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்வதற்கும்; அதையே அசோகச் சக்கரத்தைக் கொடியில் பதித்துக் கொண்டு, நாட்டு மக்களை அன்னக்காவடிகளாக்கி வரும் காங்கிரஸ் புள்ளிகள் சொல்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது!

மதுவிலக்கு கொண்டு வருவேன். அதன் மூலம் மதுவை ஒழித்துக் கட்டுவேன்!

— மதுவை ஒழிப்பதற்கு இது ஒரு வழி!

இதே நோக்கத்தோடு அடுத்தாற்போல் ஒருவன் வருகிறான்.

அவன் சொல்வதையும் கேளுங்கள்:

நானும் மதுவை ஒழிக்கத்தான் போகிறேன். ஆனால் எப்படித் தெரியுமா? உலகத்திலேயுள்ள எல்லா வகை மதுப் புட்டிகளையும் நானே குடித்து; பிறகு உலகத்தில் ஒரு சொட்டு மதுகூட யாருக்கும் கிடைக்க முடியாமல் செய்யப் போகிறேன்!

—இப்படிக் கதறி, மதுவிலக்குப் பிரசாரம் செய்தானும் அவன்! —.

இருவருடைய நோக்கமும் ஒன்றுதான்—நாட்டு மக்களுக்குத் தீமை பயக்கும் மதுவை ஒழிப்பதுதான்!

ஆனால் அதை இருவரும் எப்படி நிறைவேற்றுகிறார்கள்?

இரண்டாமவன் சொல்லுகிறபடி, மதுவிலக்கு அமுல் நடத்த எந்தக் காந்தி பக்தராவது முன் வருவாரா?

—முன்வர மாட்டார்கள்!

ஆனால் எது எப்படியிருந்தாலும்; காமராசரும், கிருஷ்ணமாச்சாரியாரும் இப்போது சொல்லிக் கொண்டு வருகிற பணக்காரர்கள் ஒழிப்பு இருக்கிறதே; அது உவமையிலே குறிப்பிட்ட இரண்டாமவன் அமுல் நடத்தலாம் என்று கருதுகிற மதுவிலக்குத் திட்டம் போலவேதான் இருக்கிறது!

பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவதாகக் கூறுகிறார்கள்; ஆனால் அவர்கள் நடத்துகிற அரசாங்கமோ பணக்காரர்களுக்குப் பகிரங்கமாக உதவி செய்கிறது! அவன் சுட்டு விரல் அசைவுப்படி ஆடிப்பாடுகிறது! கண் ஜாடை காட்டுகிறபடி குட்டிக்கரணம் போடுகிறது!

செப்டம்பர் 5-ந் தேதியன்று நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்திலே திரு. பெரோஷ் காந்தியார் குறிப்பிட்ட விபரங்களைப் படித்தாலே தெரியும்—ஒரு டாட்டாவின் ஸ்தாபனத்தாருக்கு அரசாங்கம் எவ்வளவு சலுகைகளையும், உதவிகளையும் தருகிறது என்பதையும்; அவர்களிடமிருந்து வசூலிக்கக் கூடிய நஷ்ட ஈட்டுத் தொகையையும் வசூலிக்காமல் எப்படி வீணே காலத்தைக் கழிக்கிறது என்பதையும்; அவர்களுடைய தயாரிப்புகளுக்கு எப்படி அதிக பட்ச விலை கொடுக்கிறது என்பதையும் இரு கண்ணும் பழுதாகாமல் இருக்கிறவன் முன்னிலையிலே நிற்கின்ற இமயமலை போல் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்!

அவர் தந்திருக்கின்ற தகவல்கள் ஒவ்வொன்றும் திடுக்கிடத்தக்கனவாய் இருக்கின்றன; நிச்சயம் காந்தியார் இந்நேரம் இருந்திருந்தால் யாரிடத்தும் சொல்லிக் கொள்ளாமல் தற்கொலை செய்து கொள்வார் என்று அறுதியிட்டுக் கூறுகிற அளவுக்கு ஏழை இந்தியாவின் நிர்வாகிகள் அந்தக் கோடீஸ்வரர்களுக்கு உதவியிருக்கிறார்கள்; விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்!

டாட்டா இஞ்சினீயரிங் அண்டு லொக்கோமோட்டிவ் கம்பெனி (டெல்கோ) என்பது ரயில் இஞ்சின்கள் தயாரிக்கும் ஸ்தாபனத்தின் பெயர்!

இந்தக் கம்பெனியின் விஸ்தரிப்புக்கென்றே இந்திய ரயில்வே போர்டார் 1.14 கோடி ரூபாய்கள் வழங்கியிருக்கின்றனர்.

ரயில்வே போர்டு கொடுத்திருக்கும் இந்தத் தொகையினை டாட்டா கம்பெனி தங்களது (டெல்கோ) கம்பெனியின் விஸ்தரிப்புக்காக மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்பது ஒப்பந்தத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்!

—ஆனால் டாட்டா கம்பெனியாரோ மேற்சொன்ன 1.14 கோடி ரூபாய்களை கம்பெனியின் விஸ்தரிப்பைத்தவிர்த்த; இதர விவகாரங்களுக்கே பயன்படுத்தியிருக்கிறார்கள்!

கம்பெனியின் வளர்ச்சிக்கு; விஸ்தரிப்புக்கு என்று வாங்கிய அந்த மிகப் பெரிய தொகையினை, வேறு வாகனங்கள் செய்வதற்கும், ரோடு ரோலர்கள் செய்வதற்கும் பயன்படுத்தியிருக்கிறார்கள், அந்தப் பக்கா முதலாளித்துவ ஸ்தாபனத்தார்!

அதுமட்டுமல்ல; ரயில்வே போர்டார் டாட்டா கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் இருக்கிறதே; அது மிகமிக ஊழல் நிறைந்ததாகவும்; பாரபட்சம் நிரம்பியதாகவும் இருக்கிறதாம்!

அந்த ஒப்பந்தத்தைப் படித்து விட்டு அதனால் அதிக பட்ச பலன் பெறுபவர்கள் யாரென்று கேட்டால் டாட்டா கம்பெனியார்தான்—என்று யாரும் கூறிவிடலாமாம்!

அது பற்றி முன்னாள் தணிக்கை அதிகாரி (நரசிம்மராவ்) கூறுகிறார்:

இதுபோல் குழப்பம் நிரம்பிய ஒப்பந்தத்தை நான் இதற்கு முன்பு கண்டதில்லை......முதலில் இந்த ஒப்பந்தத்தைக் கண்டதும் நான் திடுக்கிட்டு விட்டேன்...ரயில்வே போர்டின் பொருளாதார ஆலோசகர்களைச் சந்தித்து இது போன்றதொரு ஒப்பந்தத்தை எப்படிச் செய்து கொண்டார்கள் — என்று கேட்க வேண்டுமென்று கருதினேன்......மேலும் இந்த முழுச் சமாசாரத்தைப் பற்றிச் சந்தேகமும் கொண்டேன்.

அதுபோலவே வேறொரு தணிக்கை அதிகாரி (ஏ.கே. சந்தா) கூறுவதையும் படியுங்கள்:

இந்த ஒப்பந்தம் புரிந்து கொள்வதற்கே மிகவும் கடினமாயிருக்கிறது...நான் தெளிவாகவே சொல்லிவிடுகிறேன்—இதில் பல பிரிவுகள் எனக்கு விளங்கவே இல்லை. இது பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன்; இதை எப்படி சமாளிக்கப் போகிறார்கள்—என்பது குறித்து எனக்கு சரியான விளக்கம் தெரியவில்லை.

—இந்த உபகண்டத்தின் மிக முக்கிய கணக்குத் தணிக்கையாளர்கள் இப்படிக் கருத்துத் தெரிவிக்கும் வகையிலே ரயில்வே போர்டு டாட்டா கம்பெனியாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது!

—இப்படி ஆரம்பமே ஊழல் மயமாக இருக்கும் இந்த ஒப்பந்தம் போகப்போக என்ன பயன் தந்தது என்று கருதுகிறீர்கள்?

எதுவுமில்லை!

அதுபோகட்டும்; வஞ்சகமாக ஒப்பந்தம் செய்து கொண்டதே டாட்டா கம்பெனி; தனக்குகந்த வகையில் ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகாவது அதன்படி நிற்பதற்கு சிறிதளவாவது முயன்றதா?

அதுவுமில்லை!

ஒப்பந்தப்படி 1946-ம் ஆண்டிற்குள் டாட்டா கம்பெனி ஐம்பது பாய்லர்களைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும்!

அதன்படி 1946-ம் ஆண்டு ரயில்வேயுக்கு 50 பாய்லர்கள் கிடைத்தனவா?

இல்லை!

பிறகு எப்போது கிடைத்தன? 1954-ல்! அதாவது எட்டு முழு ஆண்டுகளுக்குப் பிறகு!

—இப்படியெல்லாம் ஒப்பந்தங்களை மீறியிருக்கிறது டாட்டா கம்பெனி!

அப்படியிருந்துங்கூட அரசாங்கம் அந்தக் கம்பெனிக்குச் சலுகை வழங்குவதை நிறுத்தவில்லை!

நிறுத்தாததோடு மட்டுமல்ல; உரியதற்குமேல் அதிகமாகவும் வழங்கியிருக்கிறது!

2.29 கோடி ரூபாய்கள் மான்யம் வழங்கியிருக்கிறது!

அதற்காக மேலும் ஏழு லட்சம் ரூபாய்கள் கொடுத்திருக்கிறது!

அது மட்டுமின்றி; அரசாங்கம் தனக்குச் சேர வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையான 12.51 லட்சம் ரூபாய்களையும் வசூல் செய்யாமல் விட்டிருக்கிறது!

—டாட்டா கம்பெனிக்காரர்கள் யார்?

நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுத்தால் 'திவால்' ஆகும் நிலைமையில் கம்பெனியை வைத்திருப்பவர்களா?

✻ 10-ம் பக்கம் பார்க்க

விற்பனையாகிறது!
எழில்மிகு இலக்கிய ஏடு
முத்தாரம்
செப்டம்பர் இதழ்!

சென்ற வாரத் தொடர்ச்சி

2

சோமநாதபுரத்துச் சிலை

பி.சி. கணேசன் பி.எஸ்ஸி., பிடி.

நீல வானத்தை யானைத் தந்தம் போன்ற பிறை நிலா அழகு படுத்திக்கொண்டிருந்தது. முத்துக்களை பொரி யிறைத்தது போன்று நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. யானைகள் பிளிறும் ஓசையும் குதிரைகள் கனைப்பதும், ஆயுதங்கள் ஏற்படுத்தும் 'கலகல' ஒலியும் எங்கும் கேட்டன. கண்ணுக் கெட்டிய தூரம் ஒரே வெள்ளைக் கூடாரங்கள்! ஆங்காங்கே எரியும் வர்த்திகளின் ஜுவாலை!

பைரூனி, திறந்த வெளியில் அமர்ந்து வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். கஜினியின் சபையை அலங்கரித்த மணிகளில் பைரூனியும் ஒருவன்; பைரூனி ஒரு சிறந்த வான நூல் மேதை; வானாராய்ச்சித் துறையில் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளன். பார்ப்பதற்கு வானமும், அமர்ந்து சிந்திக்க பூமியும் இருந்தால் அவனுக்குப் போதும்; கற்பனைக் குதிரை கடிவாளத்தை அறுத்துக்கொண்டு புறப்பட்டுவிடும். கிரகங்களோடு அவன் உள்ளம் ஒன்றிப்போகும். புதிய உண்மைகள் ஊற்றுபோல் பெருக்கெடுக்கும். வானாராய்ச்சித் துறை புதிய பல உண்மைகளைப் பெறும்.

பைரூனி மெய்மறந்து வீற்றிருந்தான். தாரகைகள் அவனோடு உரையாடின. அவைகளின் பாஷை அவனுக்கு மட்டும்தான் புரியும். அவன் கேட்கும்கேள்விகளுக்குச் சில கண் சிமிட்டிப் பதில் சொல்லும்! சில கண் சிமிட்டாமலேயே புதிர் போடும்! ஆனால் அவன் சிந்தனை, அத்தனைக்கும் பதில் காணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

வானத்து நட்சத்திரங்களில் ஒன்றோ என்று கூறும்படி, சோமநாதர் ஆலயத்தின் நந்தா விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. விளக்கின் செயற்கை யொளியையும், தூரத்தில் கண் சிமிட்டி வேடிக்கை காட்டும் விண் மீன்களின் இயற்கை ஒளியையும் ஒப்பிட்டுப் பார்த்தான் பைரூனி! காற்றடித்தால் தீபம் அணையும்; ஆனால் அதோ, எட்டாத உயரத்தில், அணையாத ஜோதியாய் விளங்கும் அந்த நட்சத்திரங்கள்......கஜினியின் புகழும் ஆற்றலும் அப்படிப்பட்டதுதான். ஆனால் சோமநாதபுரத்தின் எதிர்காலம்...? சிந்தித்தான் பைரூனி! மீண்டும் அவன் தலை நிமிர்ந்து பார்த்தபொழுது ஆலயத்தின் நந்தா விளக்கு அணைந்து போயிருந்தது!

பைரூனியின் முகம் மலர்ந்தது. ஆம், சோமநாதர் ஆலயமும் எரிந்து, அணைந்துபோன நந்தா விளக்காகச் சில தினங்களில் ஆகிவிடும். கஜினியிலிருந்து வீசும் காற்றில் இந்து மதமென்னும் தீபம் அணைந்து போவது உறுதி! வானத்தை அளாவிய ஆலயங்கள் கஜினியால் தரைமட்டமானதைக் கண்ணால் கண்டவன் பைரூனி. மதுராவின், ஆலயம்—இந்து மதத்தின் ஈடில்லாக் கருவூலம்! அந்தக் கலைக் கருவூலம் மண்ணோடு மண்ணாகிய பொழுது, அந்தச் சிதைந்த சுவர்களில் சிந்தனைக்கு ஏதாவது வேலை—வானாராய்ச்சிபற்றி இந்துக்கள் கண்ட உண்மைகள்—ஏதாவது இருக்குமா என்று தேடியவன் பைரூனி. மதுராவின் நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட தங்கச் சிலை அவன் கண் முன் காட்சியளித்தது. விண் மீன்களைவிடப் பிரகாசம் பொருந்திய நவமணிகள்! அப்பப்பா! இந்தியா உண்மையிலேயே பொன்னும் மணியும் புதைந்து கிடைக்கும் பூமி!

வானாராய்ச்சி மேதைகள் இந்தியாவிலே பலருண்டு என்று பைரூனி கேள்விப்பட்டிருக்கிறான். கோள்களின் நிலை பூமியில் வாழும் மனிதர்களின் வருங்காலத்தை நிர்ணயிப்பதைக் கணித்துக் கூறும் சோதிடர்கள் நிறைய இந்தியாவில் உண்டு என்றும் கேள்விப்பட்டிருக்கிறான். அவர்களைக் காண வேண்டும்; அவர்களுடைய சாஸ்திரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பைரூனிக்கு நிரம்ப ஆசை; ஆனால் கஜினியின் படையெடுப்பைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர்களெல்லாம் கண்ணில் படாமல் ஓடி மறைந்து விட்டார்கள். ஆனால், பைரூனிக்கு மட்டும் ஒரு சந்தேகம்; உலக மக்களின் வருங்காலத்தைக் கணித்துச் சொல்லும் இவர்கள் தங்களுடைய வருங்காலத்தை முன் கூட்டி அறியாதது ஏனோ?

பைரூனி மெய்மறந்து யோசனையில் ஆழ்ந்திருந்தான். திடீரென்று இரண்டு கரங்கள் அவன் தோள்களைப் பிடித்துப் பலமாக உலுக்கின. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கலகலவென்று சிரித்தபடியே கஜினி முகம்மது நின்றுகொண்டிருந்தான்.

"என்ன மகராஜ், திட்டங்கள் வகுக்க வேண்டிய நேரத்தில் இப்படி......" என்று இழுத்தான் பைரூனி.

கஜினி பதில் பேசாமல் பெருமூச்சுவிட்டான். அவனுடைய கண்கள் சோமநாதர் ஆலயத்தின் கம்பீரத்தை ஆரோகணித்துக் கொண்டிருந்தன.

"எவ்வளவு நாட்களுக்குத்தான் இந்த முற்றுகை நீடிப்பது?" என்றான் பைரூனி.

"கோட்டைக்கதவுகள் திறக்கப்படும் வரை," என்றான் கஜினி.

"கதவுகள் திறக்காமலேயே போய்விட்டால்......"

பைரூனியின் பேச்சு, கஜினியின் உள்ளத்தில் கேலிச் சிரிப்பை உண்டாக்கியது. அதை வெளியில் காட்டாமல் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பிறகு மெதுவாக, "ஏன் பைரூனி, நீ தான் சம்ஸ்கிருதத்திலும் பெரிய பண்டிதனாயிற்றே; இந்தக் கோட்டைச் சுவரின் கல்வெட்டுகள் நமக்குச் சாதகமான உண்மைகள் எதையும் சொல்லவில்லையா?" என்றான்.

"இந்து மதத்தின் பெருமைகளைச் சொல்லுகின்ற அளவுக்குக் கோட்டையின் இரகசியங்களை அவைகள் சொல்லவில்லையே," என்று உதட்டைப் பிதுக்கினான் பைரூனி. கஜினி மௌனமாகவே யிருந்தான்.

"முற்றுகை......" என்றான் பைரூனி மீண்டும்.

"முற்றுகையைக் கலைத்து விடுவதும் விவேகமல்ல. சோமநாதபுரத்தின் செல்வம் கஜினியின் கஜானாவை நிரப்ப வேண்டும். இங்கு கிடைக்கும் முத்தும் பவளமும், ஒளி உமிழும் மணிகளும், இஸ்லாமியப் பெண்களின் மேனியில் பட்டுச் சிறக்க வேண்டும்......சோமநாதரின் சிலை நொறுக்கப்பட்டு, அந்தக் கற்கள் பள்ளி வாசல்களின் படிகளாக அமைய வேண்டும்......கல்லிலே கடவுளைக் காணும் காட்டுமிராண்டித்தனத்தை வேரறுப்பதே கஜினியின் லட்சியம். அந்த லட்சியம் நிறைவேறும்வரை கஜினி ஓய மாட்டான்; ஒழியமாட்டான்!"

"ஆனால்......"—இழுத்தான் பைரூனி.

"என்ன, ஆனால்?"

"போர் வீரர்களின் உள்ளங்களையும் நீங்கள் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். பெண்டு பிள்ளைகளைப் பிரிந்து அவர்கள் தங்களோடு வந்து நீண்ட நாட்களாகிவிட்டன. உற்றார் உறவினர்களைப்பார்க்க வேண்டுமென்று அவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள். இந்த நிலையில்......"

"உண்மை பைரூனி! அவர்களுடைய மன நிலையை நானும் அறிவேன். அவர்களுக்கு நீயும் மற்றவர்களும் நிலைமையை எடுத்துச் சொல்லுங்கள். சோமநாதபுரத்தின் வீழ்ச்சியில்தான் இஸ்லாமின் வருங்காலமே இருக்கிறது. இந்துஸ்தானத்தின் செல்வமனைத்தும் சோமநாதர் ஆலயத்தில் கட்டிக் காக்கப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கும் பொருள்களெல்லாம் போர் வீரர்களிடையே வாரி வழங்கப்படும் என்பதை அறிவியுங்கள். காதலியரை எண்ணி, விரகதாடமடைவோருக்கு, இந்துஸ்தானத்தின் முத்தும் மணியும் அவர்களுடைய ஏந்திழைகளின் தந்த மேனியை அழகுபடுத்திடும் காட்சியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துங்கள்...மதப் பற்றும், பொருளாசையும் அவர்கள் உள்ளங்களில் போர் வெறியை ஊட்டட்டும்.........கனவு நிறைவேறாமல், முகம்மது கஜினிக்குத் திரும்பமாட்டான்! கஜினி மக்கள் ஒன்று சோமநாதன் சிதைந்த சிலையை வரவேற்க வேண்டும்; அல்லது கஜினி முகம்மதுவின்—அவர்களுடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான சுல்தானின்—சடலத்தை வரவேற்க வேண்டும்!"

கஜினியின் பேச்சில் தீர்மானம் தொனித்தது. பைரூனி சிந்தனையில் மூழ்கியவனாய் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

* * *

இரவு முழுவதும் கஜினிக்குத் தூக்கம் வரவில்லை. அவன் மனம் ஏனோ நிலையில்லாமல்

✻ 8-ம் பக்கம் பார்க்க

மறைமலையடிகளார்
ஏழாம் ஆண்டு நினைவு விழா
15—9—1957 ஞாயிறு
சென்னை இராஜாஜி மண்டபத்தில்
சென்னை நகராண்மைக் கழகத் தலைவர்
திரு கே. என். சீனிவாசன் அவர்கள்
தலைமையில் கொண்டாடப்பெறும்.
நாவலர் நெடுஞ்செழியன், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், தமிழ்மலை இளவழகனார், ஆசிரியர் சிவ. முத்து முதலியோர் பேசுவர்.

வியர்வை வீண்போனதில்லை; கண்ணீர் சக்தி இழந்ததில்லை!

முதல் பக்கத் தொடர்ச்சி

நமது பக்கமோ' ஒரு நம் நாடு ...தினத்தந்தி!

வார ஏடுகளிலே இருட்டடிப்பு-இயக்க ஏடுகளில் மட்டுமே ஆதரவு!

'கருங்காலிகள் பிரவேசம்—விஷமப் பிரச்சாரம்—இத்தனையையும் கடந்து உழவர்கள் வெற்றி முரசைத் தட்டியிருக்கிறார்கள். நங்கவரம் விவசாயிகள் முன்னேற்ற சங்கம் நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ள ஏழை உழவர்களை ஒரு அணி வகுப்பில் நிறுத்துகின்ற பணியினைச் செவ்வனே செய்திருக்கிறது இந்த அறப் போரின் மூலம்!

"பண்ணையார்கள் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்; அதனால் அறப் போர் தோற்றுவிடும். நாம் கேலி மொழிகளை அள்ளி வீசியபடியிருக்கலாம்" எனக் கனவு கண்டோர் வெட்கித் தலை குனிகின்றனர்.

"நங்கவரம் மிகச் சிறிய பிரச்சினை—இதுபற்றிப் பேசுவதோ எழுதுவதோ கூட நமது பெரிய பனிதத் தன்மைக்குப் பெருமை தராது" என இறுமாப்பு கொண்டிருந்தோர், தங்கள் இழி செயலுக்கு வருந்தி நிற்கிறார்கள்.

"நாமெல்லாம் போராட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லையே; அதற்குள் முடிந்து விட்டதே" என வருந்துவோர் பலர்.

இப்படிப் பலதரப்பட்டவர்களை நமக்கு அறிமுகப்படுத்தி வைத்த பெருமை நங்கவரம் அறப் போருக்கு நிச்சயமாக உண்டு.

நங்கவரம் அறப் போர்—உழவர்களுக்கு ஒரு வழிகாட்டி! நடத்திய தலைவர்களுக்குப் புதிய பயிற்சி! புதிய பயிற்சியிலும் திறமையும் தெளிவும் மிகுதியாகவே காணப்பட்டது என விஷயமுணர்ந்தோர் கூறினர்; கூறுகின்றனர்.

நங்கவரம் போராட்டம்—நாதியற்ற போராட்டமாகிவிடும் என நடுங்கா நாக்கு கொண்டு பேசியவர்கள் அனைவருமே இன்று இருக்குமிடம் தெரியவில்லை! வெற்றி கிட்டிவிட்டது!

இந்த வெற்றிக்கு உழவர்கள் ஏற்றுக்கொண்ட இடர்களும், அறப் போர்த் தலைவர்கள் தாங்கிக்கொண்ட தாக்குதல் கணைகளும், இழி மொழிகளும் ஏராளம்! எனினும் வெற்றிப் பாதையை நாடிச் செல்லும் இலட்சிய நோக்குடையோரின் கடமை உள்ளத்தை எந்த முனைத் தாக்குதலும் அசைத்ததில்லை யென்பதையே நங்கவரம் அறப்போரின் முடிவு நமக்கும், நாட்டுக்கும் பெருமிதத்தோடு அறிவிக்கிறது.

மாட்டேர் வாரதாரர்களாய் சாகுபடி செய்யும் உரிமை பெற்றிருந்த உழவர்கள், இனி கூலிகளாய்த்தான் நடத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டு, நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

'அவர்களைப் பழைய முறைப்படி நடத்திடவேண்டும்; நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது' என வேண்டுகோள் விடப்பட்டது. அந்தக் குரல் முதலில் அலட்சியப்படுத்தப் பட்டது.

அமைச்சர்களை, அதிகாரிகளைச் சந்தித்து பிரச்சினையில் நல்ல முடிவு காணுமாறு பல முறை வேண்டப்பட்டது. அமைச்சர்கள் முயற்சிப்பதாகச் சொன்னார்கள்; அதிகாரிகள் முயற்சித்தனர். ஆயினும் உழவர்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கவில்லை. எல்லா முயற்சிகளும் தோல்வியுற்ற பின்னர் தான், சென்ற திங்கள் 23-ம் நாள் விவசாயிகள் முன்னேற்ற சங்கம் அறப்போரில் குதித்தது. திராவிட முன்னேற்ற கழகம் ஆதரவு தர முன் வந்தது. கழகத்தின் சட்ட மன்ற உறுப்பினன் என்ற முறையில் நான் இந்தப் பிரச்சினையில் ஆரம்பம் முதல் ஈடுபாடு கொண்டது போலவே அறப்போரிலும் ஈடுபாடு கொண்டேன். கழகம் கட்டிக் காக்கும் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு எள்ளளவு முனை முறிவும் ஏற்படாதவாறு அறப்போர் அமைதியாகவே நடைபெற எங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டோம்.

உழவர்கள் நூற்றைம்பதுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்; தாய்மார்கள் சிறை பிடிக்கப்பட்டனர்; ஒரு நாள் கண்ணீர்ப்புகை, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் வரையிலே நிலைமை வளர்ந்து, இறுதியில், கழனிகள் குருதிக் குளங்களாகும் கொடுமை நடைபெறாமல் தவிர்க்கப்பட்டு விட்டது. அறப்போரில் ஈடுபட்டவர்களைப் போலவே போலீஸ் அதிகாரிகள் சிலரும் அமைதியைக் காக்க அரும்பாடுபட்டனர். கம்புக்குள் செருகியிருந்த கத்தியுடன் ஒருவர் போலீசாரால் பிடிபட்டார்; அவர் நிலப்பிரபுக்களின் ஆள் எனவும் தெரியலாயிற்று. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகும் சூழ்நிலையும் உருவாயிற்று.

அதிகாரிகள், சமரச முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அது, உழவர்களின் கோரிக்கைகளை நிலப் பிரபுக்கள் ஏற்றுக் கொண்டனர் என்ற அளவில் பெரும் வெற்றியைத் தந்திருக்கிறது.

திரு. ராமநாத அய்யர் பண்ணையைப் பொறுத்தமட்டில் ஏற்பட்டுள்ள நல்ல முடிவையொட்டி, மற்றும் நங்கவரம் பகுதியில் விவசாயிகள் முன்னேற்ற சங்க உழவர்கள் பணிபுரியும் பண்ணைகளிலும் நல்ல முடிவு ஏற்படும்.

அதுமட்டுமன்றி, நங்கவரத்தைச் சுற்றியுள்ள வேறு பல ஊர்களின் பிரச்சினைகளும் இந்த முடிவையே எடுத்துக் காட்டாக வைத்து நல்ல தீர்ப்பு காண வாய்ப்பு ஏற்படுமென்றும் நம்புவதில் தவறில்லை.

ஐம்பத்தாறு ஏகர் நிலம் மட்டும் பண்ணையார் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என ஒப்பந்தம் கூறுகிறது. உழவர்களின் கோரிக்கையிலும் அதுபற்றி தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதில் மிகப் பெரும் வெற்றி எதுவெனில், ஒவ்வொரு உழவனுக்கும் ஒன்றரை ஏகர் நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டு, அவன் குத்தகை சாகுபடிக்காரனாக ஏற்றுக்கொள்ளப் படுகிறான். மீதியுள்ள நிலத்திற்கு அவன் மாட்டேர் வார சாகுபடி முறைமைக்கும் அனுமதிக்கப் படுகிறான். அப்படி சாகுபடி செய்யும் நிலம் இதுவரை அவன் சாகுபடி செய்த பழைய நிலமாகவே இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அறப்போரில் கைது செய்யப்பட்ட உழவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

இந்த நல்முடிவு தோன்றக் காரணமாயிருந்தோர் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறப்போருக்கு ஆதரவு

அவர் வீரம் காணீர்!

வானமே வில்லாக வளைப்பார் அந்த
வல்லமை மிகக்கொண்ட சொல்லால் வல்லார்
மானமே பறித்திட்ட வடவர் போக்கை
மாற்றிடவோ அவராலே ஆகவில்லை!
மண்டியுமிட்டேதான் கேட்டார் அந்த
மலைவளம் மிகவும்தான் கொண்ட நாடு
மறவர்வாழ் தேவிகுளம், பீர்மேடு செல்வக்காடு;
'உம்மவர்; தமிழர், உளர் அங்கு நிரம்ப
அறிவோம் ஆனால், உமக்கு அஃது இல்லை;
உத்திரவு! அறிந்திடுக!' என்றார் நேரு.
'எண்ணிக்கொள்வீர், இப்போது, ஐயா!' என்று
ஏழெட்டு கரணங்கள் போட்டு விட்டு
இங்கு வந்து வாய்நீளம் காட்டுகின்றார்
இதுவென்ன வீரமே!?—அறிந்தோர் கூறீர்!
'தென்னாடு தேய்வுறாது தடுததே தீர்வேன்;
தேடுவேன் அதற்கான பணத்தை' என்று
தெந்தினம் தினந்தினம் பாடி விட்டு,
'தேவனே! தேசத்தின் தலைவா!' என்றெல்லாந்தான்
அர்ச்சித்து அடிதொட்டு கேட்டார், அந்தோ!
அரைஆயிரம் கோடிக்கும் குறைவாய் அன்று,
'ஆகா! அவ்வளவா? உமக்கென்ன ஆசை ஐயா!
அளித்திடுவோம் ஒரு நூற்றைம்பதுவே' என்று
ஓங்காரக் கூச்சலுடன் நேரு கூறி
ஓடோடி இங்குவந்து பதுங்கிக் கொண்டார்!
ஊரூரும் போய்இன்று உருட்டிப்பேசி
உள்ளநிலை மறைந்திடவே முயன்று வாரார்
'சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்றே பெயரும்
செதுக்கிடவும் ஏலாதால்தான் ஆகும் என்று
தெரிவித்து, கைவிரித்தல், என்ன கூற்றோ!
தெளிவுள்ளோர் அனைவருமே தெரிந்து கூறீர்!!

—"நம் நாடு"

நல்கியதை வைத்தும், அண்ணா அவர்கள் குளித்தலைக் கூட்டத்தில் 'கடைசி வேண்டுகோள்' விடுத்ததைக் கொண்டும், மாற்றுக் கட்சியினர், 'தி. மு. கழகம் தனது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவே இப்போராட்டத்தைத் துவங்குகிறது' என முழங்கினர்; மந்திரிகள போகுமிடமெல்லாம் பேசினர்.

உழவர்கள்—நில முடையோர் இருவருக்குமிடையே நல்லுறவை முறித்திடும் எண்ணம் என்றும் நமக்கிருந்ததில்லை. உழவர்களின் உரிமைப் பறிக்கபபட்டு, அவர்கள் வயிறு காய்ந்து, கண்ணீர் மல்கி நிற்கின்றனரே எனக் கண்டுதான் அறப்போருக்கு ஆதரவு வழங்கப்பட்டது. திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அம்பில்-தர்மலிங்கமும், மாவட்டக் கழகத்தினரும் எல்லா வகையிலும் ஆதரவு தர முன் வந்தனர்.

யாருக்கும், போராட்டத்தை வைத்து கட்சிக்குப் புகழ் தேடவேண்டுமென்ற விழைவு இல்லை. உழவனின் கண்ணீர் துடைக்கப்பட்டால் போதும் என்பதே நோக்கமாயிருந்தது.

விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர் முத்துகிருஷ்ணன், செயலாளர் கவுண்டம்பட்டி—முத்து ஆகியோரின் அரிய தொண்டும், உழவர் பெருங்குடி மக்களுக்குப் பணி புரியும் ஆர்வ மிக்கத் தோழர்களின் பணியும் வீண் போகவில்லை; வெற்றி வாகை சூடியது.

மாவட்ட அதிகாரிகள் நமது நன்றிக்குரியவர்கள். அறப்போரை ஆதரித்து உழவர்களுக்குக் கைகொடுத்த மூற்போக்கு நாளிதழ்களும், இயக்கத்தின் கிழமை ஏடுகளும் உழவர்களின் அன்பைப் பெறுகின்றன. இறுதியில் சமரசத்திற்கு வந்து உழவர் உரிமையைத் தந்த நிலச் சொந்தக்காரரும் பாராட்டப்பட வேண்டியவரே!

வியர்வை வீண் போனதில்லை—கண்ணீர் சக்தி யிழந்ததில்லை—ஏழைதோற்றதில்லை—அறம்வென்றேயிருக்கிறது என்பதின் அடையாளமே நங்கவரம் அறப் போரின் வெற்றி!

அன்புள்ள,

நண்பன்.

சிந்தனைக்குச் சில!

[பாரதிக்கு நினைவு நாள் கொண்டாடுவோர் நினைத்துப் பார்க்க வேண்டியவைகள் சிலவும் அவரது உணர்ச்சி மிக்கக் கவிதைகளிலே இருக்கின்றன. அவைகளைத்தான் கீழே தொகுத்துத் தந்திருக்கிறோம்!]

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே!
வந்தே மாதர மென்பார்.

★

நந்தனைப் போல்ஒரு பார்ப்பான்—இந்த
நாட்டினில் இல்லை; குணம் நல்லதாயின்,
எந்தக் குலத்தின ரேனும்—உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்.

★

உண்மையின் பேர்தெய்வம் என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்.
உண்மைகள் வேதங்கள் என்போம்—பிறிது
உளள மறைகள் கதையெனக் கண்டோம்.
கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்,
வடமலை தாழ்ந்ததனாலே—தெற்கில்
வந்து சமன்செய்யும் குட்டை முனியும்,
நதியினுள் ளேமுழு கிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்.

★

சூத்திர னுக்கொரு நீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி;
சாத்திரம் சொல்லிடு மாயின்—அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோமே!

வடாற்காடு மாவட்ட தி. மு. க. மாநாடு!

திருவண்ணாமலையில் நடைபெறும்.

21-9-57

இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர் :

சுவாமி அருணகிரிநாதர்

திறப்பாளர் :

சி. வி. எம். அண்ணாமலை

22-9-57

தி. மு. க. அரசியல் 2-வது மாநாடு

தலைவர் :

அன்பில் - தர்மலிங்கம்

திறப்பாளர் :

வெ. கிருட்டினமூர்த்தி எம். ஏ.

அறிஞர் அண்ணா

நாவலர் **நெடுஞ்செழியன்**

கருணாநிதி	என். வி. நடராசன்
அரங்கண்ணல்	சம்பத்
மதியழகன்	தில்லை-வில்லாளன்
அன்பழகன்	அப்பாதுரை
தாமரைச்செல்வன்	கண்ணதாசன்
சத்தியவாணிமுத்து	கே. ஆர். ராமசாமி
ஆசைத்தம்பி	கோவிந்தசாமி
எஸ். எஸ். ராஜேந்திரன்	கி. மனோகரன்
சி. பி. சிற்றரசு	டி. வி. நாராயணசாமி

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வர்.

எம். ஜி. ஆர். நடிக்கும்

"இன்பக் கனவு"

"அட்வகேட்-அமரன்"

நாடகங்கள் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

கட்டணம்: ரூ. 5, 3, 1. பெண்கள் அணா 8.

அனைவரும், திரண்டு வாரீர்!

ப. உ. சண்முகம் எம். எல். ஏ.
மா. பா. சாரதி எம். எல். ஏ.
செயலாளர்கள்

முல்லை சத்தி
வ. கு. தலைவர்

சோமநாதபுரத்துச் சிலை . . .

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

தடுமாறிக் கொண்டிருந்தது. அவனுடைய அந்தப்புரத்துச் சுந்தரிகளின் முகத்தை ஒவ்வொன்றாகக் கற்பனையில் கொண்டு வந்து பார்க்க அவன் செய்த முயற்சிகள் வீணாயின. அவர்களுடைய முகங்களெல்லாம் அவனுடைய நினைவிற்கு வராமல் மறைந்தே போயின. எந்தப் பெண்ணைக் கற்பனை செய்தாலும் ஒரே பெண்ணின் முகம்தான் மீண்டும் மீண்டும் அவனுடைய 'கண்களுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் வேறு யாருமல்ல; முகம்மதியப் போர் வீரனால் ஓநாயின் மரணப் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்ட குழந்தையின் தாய்! இந்துப் பெண்!!

இந்துஸ்தானத்தில் வாழ்கின்ற பெண்களுக்குத்தான் என்ன அழகு; எப்படிப்பட்ட தெய்வ பக்தி! இந்துஸ்தானத்தில் வீசும் காற்றுக்கும், ஓடும் நீருக்கும், பூமியின் மண்ணுக்கும் பெண்களுக்கு அழகு தோய்க்கும், அற்புத ஆற்றல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பாரசீகத்தின் பளிங்குச் சிலைகளைவிட, காபூலின் கருப்புத் திராட்சைக் கண்ணழகிகளைவிட, மத்திய ஆசியாவின் மஞ்சள் நிற அழகிகளைவிட, இந்துஸ்தானத்துப் பெண்கள் ஈடில்லா அழகுடன் விளங்க என்ன காரணம் இருக்க முடியும்?

தாய்மையின் உணர்ச்சி பொங்க, இரக்கத்தோடு அவள் பார்த்த பார்வை, பிறகு முகம்மதியன் என்று தெரிந்தவுடன் வெறுப்பும் விரக்தியும் தோன்ற அவள் நோக்கிய நோக்கு...... முகம்மதியர்களிடம் இந்தப் பெண்களுக்கு எவ்வளவு வெறுப்பு வளர்ந்திருக்கிறது! மதம் வேறுபட்டவுடன் பொங்கி வரும் நன்றியுணர்ச்சிகள் கூட அல்லவா வற்றி வரண்டு விடுகிறது! கஜினியின் மனதை மேற்குறித்த சிந்தனைகள் முற்றுகையிட்டுக்கொண்டிருந்தன.

கஜினி முகம்மது அவளைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்?

கானகத்தில், ஓநாயின்மீது அம்பெய்து குழந்தையைக் காப்பாற்றியது வேறு யாருமல்ல; கஜினி முகம்மதுவேதான். ஓநாயின் மீது அம்பெய்த பொழுது வெறும் இரக்க உணர்ச்சி மட்டுமே கஜினியின் உள்ளத்தில் இருந்தது. ஆனால் குழந்தையை உயிருடன் பெற்றவுடன் அகமும் முகமும் மலர, வண்டெனச் சுழலும் விழிகளால் அவள் பார்த்த அந்தப்பார்வை கஜினியைக் கொல்லாமல் கொன்றது; குழந்தையின்மீது தோன்றிய இரக்கம் குழந்தைக்குரியவளின்மீது காதலாக மாறியது. ஓடிய காரணத்தால் ஆடை நெகிழ்ந்து அங்கங்கள் அழகைக் காட்ட, அரும்பிய வியர்வை பொன்னிற மேனிக்கு அழகுசேர்க்க, கானகத்தின் நடுவே நின்ற அழகுத் தேவதை கஜினியைப் புலன் மாற்றிப் போட்டுவிட்டாள்.

நினைத்திருந்தால் காவலில்லாத அந்தக் கனியை கஜினி சுவைத்திருக்க முடியும்; அந்தப்புரத்தின் அழகு முத்தாரத்தில் இந்தப் புதிய முத்தையும் சேர்த்திருக்க முடியும். ஆனால், காமத்தால் கறைபட்ட நிலையில் அவன் உள்ளம் இல்லை. அவள் இஷ்டத்திற்கு மாறாக அவளைத் தீண்டி மகிழ அவன் விரும்பவில்லை. கோயில்களில் உள்ள சிலைகளைச் சிதைத்து மகிழ்ந்த கஜினி, தன் இதயக் கோவிலில் இந்தப் பெண்ணைப் 'பிரதிஷ்டை' செய்து, மூன்று கால பூஜையல்ல; முழுக் காலமும் பூஜை செய்யத் துடித்துக் கொண்டிருந்தான்!

அவளுடைய ஆம்பல் வாயின் அழகை அவன் ரசித்துக் கொண்டிருந்த போதே அதிலிருந்து வெளிப்பட்ட சுடு சொற்கள் ஏற்படுத்திய காயத்தின் வடு அவன் உள்ளத்தில் மறையாமலே இருந்தது.

"நீ முகம்மதியன், சண்டாளன், இரக்க மற்றவன், விக்ரகங்களை உடைப்பவன்......"

அந்தக் குயில் குரல் இப்படிக் கோர கீதமிசைக்கும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை!

இந்துக்களைக் காட்டுமிராண்டி யென்று கருதும் அவன், இந்த இந்துப் பெண்ணிடம் மட்டும் ஏன் இதயத்தைப் பறிகொடுக்க வேண்டும்? வேற்றுமைகள் சமுதாயத்திலிருந்து மறைய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு தான் அல்லா இப்படிப்பட்ட பேரழகிகளை உலகத்தில் உலவ விட்டிருக்கிறாரோ!

இஸ்லாமிய மார்க்கத்தை எங்கணும் பரப்பக் கிளம்பிய பேரரசன், பெண்ணிடம் கொண்டுவிட்ட காதலுக்குப் புதிய தத்துவ விளக்கம் கண்டு கொண்டிருந்தான்.

போராட்டம் நீண்டது; இரவு குறுகியது! கஜினியும் களைப்பினால் கண்ணயர்ந்தான்.

(தொடரும்)

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

'நாற்காலி அங்கே இருக்கிறாள்' என்றுதான் கூற வேண்டும். 'மேசை அங்கே இருக்கிறான்!' என்று தான் மொழிய வேண்டும். 'என்னுடைய நாற்காலி' என்பதற்கு 'மேரி குர்சி' எனக் கூற வேண்டும். ஆனால் 'என்னுடைய மேசை' என்பதற்கு 'மேரா மேஜ்' என்றுதான் எழுத வேண்டும்! 'குர்சி' அல்லது நாற்காலி இந்தியிலே பெண்பால். அதன் அருகிலே உள்ள மேசை ஆண்பால்! மேசையும் நாற்காலியும் கூடக் காதல் புரியும் விந்தையானக் காமத்துப் பாலை இந்தி இலக்கணத்திலேதான் காணலாம். வேறு எந்த மொழியிலும் காண இயலாது. அது மட்டுமா? 'அவன் சாப்பிடுகிறான்' என்பதற்கு 'வோ காத்தா கை' என்று கூற வேண்டும். 'அவன் சாப்பிட்டான்' எனக் குறிக்க 'உன்னே காயா!' என எழுத வேண்டும். அப்படியானால், 'அவன் போகிறான்' என்பதற்கு 'வோ ஜாதா கை' என எழுதும் இந்திப் பண்டிதர், 'அவன் போனான்' என்பதற்கும் 'உன்னே ஜாயா!' என எழுதுவது தானே! அதுதான் முடியாது! 'அவன் போனான்' என்பதற்கு மட்டும் 'வோ கயா!' என்றுதான் எழுத வேண்டும்! என்னடா இது; தமிழன்னைப் புத்தகயாவைப் பற்றிப் பிரச்சாரம் செய்கிறானெயென எண்ணுகிறீர்கள்! இந்தியின் இலக்கணம் அத்தகைய இழிவான இலக்கணம்!

இந்தியைத் திணிப்பவர்கள், 'இந்தி பேசுபவர்கள்தொகை அதிகமாக இருப்பதனால் திணிக்கிறோம்!' என்கிறார்கள். இந்தியில் எல்லாவித லிபியைக் கையாளுவோரின் மொத்தத் தொகையையே இவர்கள் எடுத்துக் கொண்டார்கள். பல்வேறு இந்தி பேசுபவர்கள் தொகையைத் தனியே பிரித்துப் போட்டால், இன்று இந்தியாவில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் தொகையைவிடக் குறைவாகத்தான் இருக்கும்!

எஸ். எஸ். எல். சி. வகுப்பு வரை படித்த அனைவரும் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள இயலும், கல்லூரிப் படிப்புப் படித்தவர்கள், புரிந்து கொள்ளவும் ஆங்கிலத்திலே நன்கு பேசவும் இயலும். எனவே படித்த அறிஞர்கள் அனைவரும் ஆங்கிலம் அறிவார்கள். அத்துடன், நம் வாழ்க்கையோடு ஆங்கிலம் இரண்டறக்கலந்து விட்டது. எனவே நாட்டுப்புற மக்கள்கூட ஆங்கிலச் சொற்களை அடிக்கடிப் பயன்படுத்துகிறார்கள். இவையெல்லாம் ஆராய்ந்தால் ஆங்கிலமே உலகத்தோடு நாம் தொடர்புகொள்ளும் உலகமொழியாகவும், பிற மாகாணங்களோடு தொடர்பு கொள்ளும் இந்தியப் பொது மொழியாகவும் இருக்கலாம்! இந்தியை இந்தியாவின் பொது மொழியாக்குவதால் ஒரு சில குறிப்பிட்ட வடநாட்டு இந்துஸ்தானியர்களுக்குத்தான் நன்மை உண்டு. ஏனெனில் அவர்கள் தான் இந்தி மட்டும் கற்றுவிட்டு சிறந்த ஆபீசராக வர இயலும்! ஆனால் மற்ற எல்லா மொழியினரும்—ஆங்கிலமறிந்த மொழியினர் கூட—இந்தி உள்பட மூன்று மொழிகள் கற்க வேண்டும். வடநாட்டின் ஒரு சிலருக்கு நன்மை செய்வதற்காக மற்ற எல்லோரையும் துன்புறுத்துவது நியாயமோ?

ஆங்கிலத்தையே இந்தியாவின் பொது மொழியாக நீடித்தால், (1) ஆங்கிலமறிந்த ஆயிரமாயிரம் பேர் இந்தி கற்க வேண்டியதில்லை. (2) எல்லோரும் இரண்டு மொழிகள் மட்டும் கற்றால் போதும். (3) வெளிநாட்டோடும் உள்நாட்டோடும் எளிதில் தொடர்பு கொள்ளலாம். (4) ஆங்கிலம் கற்பதால் உண்டாகும் பயன்கள் யாவருக்கும் கிடைக்கும். இதனால் எல்லா மொழிகளும் வளர்ச்சியடையும்! எல்லா மொழியினரும் முன்னேற வாய்ப்பு கிடைக்கும்!

எனவே என்னருமைப் புதல்வர்களே! கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை போர்தான் நடத்துவீர்களோ— அல்லது உங்களில் பலர் உயிரையே பலி கொடுப்பீர்களோ எனக்குத் தெரியாது!...ஆனால் எப்படியாவது இந்திமொழி ஆதிக்கத்திலிருந்து விடுபட வீறிட்டு எழுங்கள்! உறங்கியது போதும்! உணர்வு பெற்று எழுவீர்! வணக்கம்!

[அந்த இன்பகரமான நேரத்திலேதானா என் அன்னை என்னை எழுப்ப வேண்டும்? மறுபடியும், கண்ணை மூடிக் கொண்டு தூங்கிக் கனவு காண முயன்றேன்! ஆனால்... என் இன்பக் கனவு ஒருமுறை கலைந்தது...கலைந்தே போய் விட்டது!]

—ஆரூர் ஆனந்தன்

திராவிடநாடு விடுதலை வாரம்

செப்டம்பர் 17-ம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழக கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப்போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

4—9—57
'அறிவகம்'
சென்னை-13

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

அவமானம்; அவமானம்!
‘பொதுவுடமை’க்கே அவமானம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களா? வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது என்று கூச்சல் போடுபவர்களா? இதைத் தவிர வேறு அவர்களுக்கு என்ன தெரியும்?

—இப்படிக் கூக்குரல் எழுப்புபவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மட்டுமல்ல; தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக்கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் தான்!

ஏக இந்தியாவைப் பிளவு படுத்தக்கூடாது என்பதிலே காங்கிரஸ்காரர்களைப் போல் இவர்களும் தங்கள் கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள்!

ஆனால் ஏகபாரதத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்ததும் நாட்டுப் பிரிவினையையொட்டி தங்கள் கட்சியையும் இவர்கள் பிரிவு செய்துகொண்டார்கள்—என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை!

அதைப் போலவே இன்றில்லாவிட்டால் நாளை—இல்லையேல் என்றாவது ஒரு நாள் திராவிட நாடு பிரிந்துவிட்டால் கூட ‘திராவிட நாட்டுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி’ என்று தாங்களும் பிரிந்துகொள்வதைத் தவிர்க்கமாட்டார்கள் இவர்கள்!

இருந்தாலும் வடக்கு—தெற்கு வாதத்தைப்பற்றி இவர்களது கருத்து என்ன?

வட நாட்டு முதலாளிகள் சுரண்டுவதை தி. மு. க. காரர்கள் எதிர்க்கிறார்கள். ஏன் தெரியுமா?

தங்களைத் தென்னாட்டு முதலாளிகளை சுரண்டவேண்டுமென்று நினைக்கிறார்கள்.

உதாரணம் கூறவேண்டுமானால் ‘டாட்டா. பிர்லாக்களுக்குப் பதில் முத்தையா செட்டியார்கள் சுரண்டுவதைத் தான் இவர்கள் விரும்புகிறார்கள்!

ஆம், கழகத்தின் நோக்கம் மொத்தமான முதலாளித்துவம் ஒழியவேண்டும்—என்பதல்ல; குறிப்பாக வடநாட்டு முதலாளித்துவத்தையும்; வடநாட்டு முதலாளிகளின் சுரண்டலையும் ஒழிப்பது தான் இவர்களது குறிக்கோள்.

—இந்தப் பொருள்படும் விதத்திலே கம்யூனிஸ்ட்டுத் தோழர்கள் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள்!

மேலும் சென்னை 5-9-57 ‘ஜன சக்தி’ இதழிலே சேலம் ‘மாக்னிசைட்’டை “வெள்ளையன் கம்பெனிக்கு விடாதீர்!” என்ற தலைப்பிலே ‘கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவல்’ வெளிவந்திருக்கிறது. அந்தக் கட்டுரையின் ஒரு பகுதியைப் படியுங்கள்:

“சேலம் மாக்னிசைட் மூலப் பொருள் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமானதாகும். இந்த மூலப் பொருளை நமது தொழில் வளர்ச்சிக்கு உபயோகித்து மீதமுள்ளதை விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தை நம் தமிழக அபிவிருத்திக்கு உபயோகிக்க முடியும்.”

சேலம் மாக்னிசைட் மூலப் பொருளை “நமது” தொழில் வளர்ச்சிக்கு உபயோகிக்கமுடியுமாம்!

“நமது” என்பது யாரைக் குறிக்கும்?

சென்னையை — தமிழகத்தை —தென்னகத்தை!

அய்யா ‘ஜன சக்தி’யாரே! ஏக பாரதம் பேசும் வீரரே! உங்கள் வாதப்படி இந்தியாவில் காஷ்மீர் முதல் குமரி முனை வரை எங்கு தொழில் அபிவிருத்தி அடைந்தாலும் அது இந்தியாவின் மொத்த தொழில் வளர்ச்சியாகத்தானே இருக்க முடியும்? நிலைமை இப்படி இருக்க; நீவிர் ஏன் “நமது” “உமது” என்று பிரித்துப் பேசுகிறீர்?

—மேலும் ‘ஜனசக்தி’ எழுதுகிறது:

“மத்திய சர்க்காரின் கையாலாகாத கொள்கையின் விளைவாக பணப் பஞ்சம் ஏற்பட்டு தமிழ்நாட்டுக்குரிய இரண்டாவது திட்டத்திற்கான நிதியில் வெட்டு விழப்போகிறது என்பதைப் பொதுவாக உணர்கிறோம்!”

தமிழ்நாட்டுக்குரிய இரண்டாவது திட்டத்திற்கான நிதியில் வெட்டு விழப்போகிறதாம்—அய்யா ‘ஜன சக்தி’யாரே! இதை நீர் ஒப்புக்கொள்கிறீர் அல்லவா? இதைத்தானே நாங்கள் ‘தெற்கு தாழ்கிறது’ அல்லது ‘தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது!’—என்று கூறுகிறோம்?

—இதைக் கேலி செய்யும் அந்தக் கட்சி ஏடு இப்படி வெட்டு விழுவதற்கு என்ன காரணம் காட்டுகிறது?

‘மத்திய சர்க்காரின் கையாலாகாத கொள்கையின் விளைவு’ தானும் அது!

—நாமும் அதைத் தானே கூறுகிறோம்—வடக்கு நம்மைப் புறக்கணிக்கிறது என்று?

ஆனால் ‘ஜன சக்தி’யாரோ வடக்கு என்று திசையைக் குறிப்பிடாமல் ‘மத்திய அரசாங்கம்’ என்று திட்டவட்டமாகக் குறித்திருக்கிறாரே!

“தென்னகத் தொழில் வளர்ச்சியின்பால் கையாலாகாத கொள்கை”யைக் கொண்டிருக்கிற—‘ஜன சக்தி’யார் குறிப்பிடுகிற ‘மத்திய சர்க்கார்’ எங்கே இருக்கிறது?

வடக்கே இருக்கிறது!

அதைத்தான் ஆச்சாரியார் கூட “தூரத்தில் இருக்கிற டெல்லி” என்று முன்பு ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார்!

—ஆக ‘ஜனசக்தி’யாரின் இந்தக் கட்டுரையின் திரண்ட சாராம்சத்தை—கருத்துரையை

※ 10-ம் பக்கம் பார்க்க

சமீபத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடியதல்லவா? அது எப்படியிருந்தது என்பதையும்; தலைவர்களின் சுறுசுறுப்பையும் விளக்குவதுதான் டெல்லி ‘சங்கர்ஸ் வீக்லி’ தீட்டியிருக்கும் இந்தக் கேலிச் சித்திரம்!

பண முதலைகளின் . . .

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

இல்லை; இல்லை!

வயிற்றுக்குச் சோறின்றி வாடும் ஏழைகளிடமிருந்தெல்லாம்; மிரட்டியும்; அச்சுறுத்தியும்; ஈவு இரக்கமின்றியும்; வரிப்பணம் வசூல் செய்யும் அரசாங்கம்தான் டாட்டா கம்பெனியாரிடமிருந்து கிடைக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை வசூல் செய்யாமல் விட்டிருக்கிறது!

இதைவிட இன்னுமொரு வேடிக்கையும்; வேதனையும் நிரம்பிய செய்தியொன்றைக் கேளுங்கள்:

அரசாங்கத்திடமிருந்து இவ்வளவு அதிகபட்ச சலுகைகளையும் பெற்றுக் கொண்ட டாட்டா கம்பெனி தனது தயாரிப்புகளுக்கு எவ்வளவு அதிகபட்ச விலையைப் பெற முடியுமோ அவ்வளவையும் பெற முயன்றிருக்கிறது!

தயாரிப்புக் காலத்தில் டாட்டா கம்பெனி—தான் தயார் செய்த ரயில் இஞ்சின்களுக்கு விதிக்க வேண்டிய விலை ரூ. 5,82,000 தான்,

ஆனால் 1954—55 காலத்தில் அர்சாங்கம் கேட்டபோது டாட்டா கம்பெனியார் கூறிய விலையோ ரூ. 6,54,544.

—அப்போது இந்த விலை மிகவும் அதிகம் என்று கருதப்பட்டது!

எனவே விலையை நிர்ணயம் செய்யும் பிரச்னை 'டாரிப் கமிஷனிடம்' விடப்பட்டது!

அவர்கள் பிறகு விலையை ஆராயப் புகுந்தார்கள்!

அப்போதாவது டாட்டா கம்பெனியார் நியாயமான விலையைச் சொல்ல முயன்றார்களா?

நியாய விலையைக்கூட கேட்காமல், 'முன் குறிப்பிட்ட விலைக்குச் சிறிது குறைவான விலையையாவது சொன்னார்களா?

அதுவும் இல்லை!

விலையை இன்னும் உயர்த்தி; ரூ. 7,20,000 தர வேண்டுமென்று, சிறிதும் பயமின்றி கேட்டிருக்கிறார்கள்!

இறுதியில் 'டாரிப் கமிஷன்' என்ன விலையை நிர்ணயித்தது என்று கருதுகிறீர்கள்?

ரூ. 6,90,000!

—ஆக; 'சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு டாட்டா கம்பெனியார் விலை கூறியிருக்கிறார்கள்—ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்த விலையை மறந்துவிட்டு!

டாட்டா கம்பெனியார் குறித்துள்ள இந்த விலையேற்றத்தை பெரோஷ் காந்தி அவர்கள் பாராளுமன்றத்திலே எடுத்துக் காட்டியபோது உறுப்பினர்கள் அனைவரும் நகைத்தார்களாம்!

உறுப்பினர்கள் மட்டுமா நகைக்கிறார்கள்? நாடே நகைக்கிறது—ஒரு பெரிய அரசாங்கம் அதுவும் 'சோஷலிசப்பாணியே தங்களது குறிக்கோள்' என்று கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கம் ஒரு முதலாளியின் கையில் அகப்பட்டுக் கொண்டு சிக்கித் தவிப்பதை; வளைந்து கொடுப்பதை; ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குத் துணிவின்றி துவண்டு கொடுப்பதைக் கண்டு—கேட்டு—உலகமே நகைக்கிறது!

டாட்டா கம்பெனியார் தங்களது ரயில் எஞ்சின்களுக்குக் குறிப்பிட்டுள்ள விலையானது இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்படும் ரயில் இஞ்சின்களை விட அதிகமானது!

ஜப்பானிலிருந்து வரவழைக்கப்படும் ரயில இஞ்சின்களை விட விலையில் உயர்ந்தது!

செக்கோஸ்லோவேகியா நாட்டிலிருந்து தருவிக்கப்படும் ரயில் இஞ்சின்களைவிட பல மடங்கு அதிக விலை கொண்டது!

இதைவிட வேடிக்கை என்னவென்றால் இந்தியாவிலே டாட்டா கம்பெனி தயாரிக்கும் இஞ்சின்களின் விலை; இதே இந்தியாவின் வேறொரு பகுதியில் அமைந்துள்ள சித்தரஞ்சன் தொழிற்சாலையில தயாரிக்கப்படும் இஞ்சின்களையும்விட அதிக விலை கொண்டதாம்!

—இப்போது சொல்லுங்கள்: இருதயத்திலே கை வைத்துச் சொல்லுங்கள்— காங்கிரஸ் அரசாங்கம் பணக்காரர்களை ஒழித்துக்கட்ட முனைகிறதா? அவர்களை ஆதரித்து; பொது மக்கள் பணத்தால் போஷித்து; அவர்களை வளர்க்க முனைகிறதா?

★

நிச்சயமாக பணக்காரர்களை வளர்ப்பதுதான் காங்கிரசின் திட்டம்; ஏனெனில் டாட்டா போன்ற பெரும் பணக்காரர்கள் இல்லையெனில் காங்கிரசே இல்லையே!

அவமானம்; அவமானம் . . .

✻ 9-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் ஒரு வரியில் குறிக்க வேண்டுமானால், ''வடக்கு வாழ்கிறது; தெற்கு தாழ்கிறது!' — என்றுதானே அதன் வாசகங்களை அமைக்க வேண்டியிருக்கிறது?

பாவம்; தெரிந்தோ தெரியாமலோ — எப்படியோ அவர்களும் நமது ஜீவதார இலட்சியத்தைத் தொடுகிறார்கள்! அந்த நிலைமைக்கு வந்து— இந்த நாட்டைப்பற்றி; இந்தப் பிராந்தியத்தைப்பற்றிப் பேசி—எழுதி வந்தால்தான் எந்தக் கட்சியும் இங்கே உயிர் வாழ முடியும் என்கிற நிலைமையை மக்கள் மன்றத்திலே ஏற்படுத்திவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

—இதைவிட இன்னொரு விசித்திரமான செய்தியைக் கேளுங்கள்!

சேலம் மாக்னிசைட் மூலப் பொருள் அன்னியர் கைக்குப் போகக்கூடாது என்று எழுதுகிற 'ஜனசக்தி' ஏடு தனது கட்டுரையின் முடிவிலே என்ன கருத்தைத் தெரிவித்திருக்கிறது என்பதைப் படியுங்கள்:

"இதுபற்றி ஒரு இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னால், இந்திய முதலாளிகள் குறிப்பாக தமிழ்நாட்டு முதலாளிகள் இத்தொழிலை நடத்துவதற்கு முடியுமா என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய தொழிலதிபர்களின் மாநாடு ஒன்றை சர்க்கார் கூட்ட வேண்டும்.''

—தமிழ் நாட்டிலேயுள்ள தொழிலை நடத்துவதற்கு— ''குறிப்பாகத் தமிழ் நாட்டு முதலாளிகள்'' முன் வர வேண்டும்! ஆமாம்; ஜனசக்தி தான் இப்படி எழுதுகிறது! திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடநாடு கோருவதன் மூலம் திராவிட நாட்டு முதலாளிகளையும்—முத்தையா செட்டியார் போன்றவர்களையும், அவர்களது சுரண்டலையும்—ஆதரிப்பதாகக் கருத்து கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அந்த 'ஜனசக்தி'தான் எழுதுகிறது!

மார்க்ஸ் — ஏங்கல்ஸ் தயாரித்த பொதுவுடமைப் பிரகடனப்படி உலகத்திலே இரண்டே வகுப்புகள்தான் இருக்கின்றன — முதலாளி; தொழிலாளி!

இவைகளுக்கு மத, இன, நாட்டு வேறுபாடுகள் எதுவும் கிடையாது!

ஒரு கம்யூனிஸ்ட்டின் கண்களுக்கு அமெரிக்காவிலுள்ள முதலாளியும் ஒன்றுதான், இந்தியாவிலுள்ள முதலாளியும் ஒன்றுதான்!

அதே போலத்தான் தொழிலாளிகளும்; எல்லா நாட்டுத் தொழிலாளர்களும் ஒரே கொடியின் கீழ் ஒன்று திரள வேண்டியவர்கள் என்பதுதான் அவர்கள் கருத்து! இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் உலகப் பாட்டாளிமக்களே, ஒன்று சேருங்கள்!' — என்ற கோஷமும் பிறந்தது!

— ஆனால் அதே இயக்கத்தின் கிளைதான இப்போது எழுதுகிறது—சேலத்திலுள்ள மாக்னிசைட் தொழிலை நடத்த இந்திய முதலாளிகள், குறிப்பாக தமிழ் நாட்டு முதலாளிகள் முன்வர வேண்டும் என்று!

நாம் தமிழ் நாட்டு முதலாளிகளுக்குப் பரிந்து கொண்டு பேசியதாக எழுதியவர்கள் எழுதுகிறார்கள், தமிழ் நாட்டிலுள்ள ஒரு தொழிலை ஏற்று நடத்துவதற்குக் — 'குறிப்பாக தமிழ் நாட்டு முதலாளிகள்' முன் வரவேண்டுமாம்!

முதலாளிகளுக்குள்ளேயே வேற்றுமை இருக்கிறதாம்!

இந்திய முதலாளிகளாம்!

அவர்களுக்குள் குறிப்பாகத் தமிழ் நாட்டு முதலாளிகளாம்!

அவமானம்! அவமானம்! கம்யூனிசத்தின் தந்தைகளாம் மார்க்ஸ் ஏங்கல்ஸ் தீட்டிய பொதுவுடமைப் பிரகடனத்துக்கே பெருத்த அவமானம்!

பிறைவானம் . . .

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

அதுதான் மோகன் என்பது சொல்லாம தெரியுமல்லவா?

''ஏகாம்பரம்—என்னை வேண்டாத பொருளைப்போல் ஒதுக்கி ஒதுக்கி வந்த முட்டாள்—எங்கே போனானோ தெரியவில்லையே!''

''என்ன ஆனால் என்ன மோகன்; உன் பெருமை அறியாத பித்தன் செத்தால்தான் யாருக்கென்ன?''

—விடுமுறையைக் கழிக்க மகாபலிபுரம் வந்த நண்பர்கள், ஏகாம்பரத்திற்கு 'அர்ச்சனை' செய்து கொண்டு வந்தார்கள்.

ஆனால் அவர்களது பேச்சைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த உருவமொன்று அதே கணம் தன் கண்களில் துளிர்த்து வந்த கண்ணீரை யாரும் காணாதவண்ணம் துடைத்துக் கொண்டதை அவர்கள் கவனிக்கவில்லை?

தேங்காய் மலைகளுக்கு மத்தியிலே கையில் அறிவாளுடன் உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்த இளநீர் வியாபாரி யார்?

இந்தக் கேள்வி நமக்கே குழப்பத்தை உண்டு பண்ணுகிறதே! மேலும், நாம் 'பிக்னிக்' வந்த நண்பர்களைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டுமே!

அதோ, மோகன் உள்ளிட்ட அந்த நண்பர்கள் உடைகளைக் கழற்றி கரையிலே வைத்துவிட்டு, கடல் நீரிலே குளிக்க இறங்குகிறார்கள்!

ஆனால் கடலிலே சிறிது தூரம் சென்ற பின் மனித சக்தியினும் பலம் பொருந்திய கடலலை ஒன்று பாய்ந்து வந்தது!

ஐயையோ, என்ன கோரம்! பாயைப் போல் சுருண்டு பாய்ந்து வந்த பயங்கர அலையிடைப்பட்டுவிட்டான் மோகன்!

''ஐயோ, நண்பர்களே! என்னைக் காப்பாற்றுங்கள்!''

—மோகனின் அவல ஒலி அலை ஓசையோடு போட்டியிட்டு எழும்பியது. கூட வந்த நண்பர்கள் கரை நோக்கி ஓடிவந்தார்கள்!

''ஐயையோ! ஐயையோ! உதவி! உதவி...'' என்ற மரண ஓலம் எழுப்பிக் கொண்டு கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தான் மோகன்.

திருதிருவென்று விழித்த பணம் பறிக்கும் நண்பர்கள் தலை தெறிக்க ஓட ஆரம்பித்து விட்டார்கள்!

ஆனால் அதே சமயம் சாவுப் பிடியிலே சிக்கித் தீனக் குரல் எழுப்பிய அந்தச் சிறுவனைக் காக்க உயிரைப் பணயம் வைத்து கடலலைகளிடையே பாய்ந்தது ஓர் உருவம்!

☆

''முகநக நட்பது நட்பன்று''— ஆமாம்; முகம் விரிய—மகிழ்ச்சி தோன்ற மாய வார்த்தைகள் உதிர்த்த நண்பர்களின் நட்பு ஒரு நட்பா? ஆபத்திலே கைவிட்டு ஓடிய அவர்களின் நட்பு நஞ்சு கலந்தது என்பதை மோகன் உணர்ந்து கொண்டான்.

''நெஞ்சத்து அகநக நட்பது நட்பு''—நாயினும் கேடாக தன்னால் மதிக்கப்பட்ட ஒருவனே தன் உயிர்காத்து உவகை தந்தான், என்கிறபோது அவனது நட்புதானே உண்மையான நெஞ்சத்தால் கொண்ட நட்பாக முடியும்?

இல்லாவிட்டால் 'நாயே, பேயே; நாசகாரனே!' என்று அடித்து விரட்டிய ஏகாம்பரத்தை—மகாபலிபுரத்து இளநீர் வியாபாரியை— வள்ளுவர் காட்டிய வழிப்படி நேசித்துவருவானா?

—சொர்ணம்

சென்ற வாரத் தொடர்ச்சி

நட்புச் செல்வம்

"முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து அகநக நட்பது நட்பு!"

—"ஜமீன்தாரின் செல்வனே! தமிழ்ப் பாடப் புத்தகத்தின் நாற்பதாவது பக்கத்தில், ஏழு, எட்டாவது வரிகளைப் போய்ப் படித்துப் பார்; திரும்பத் திரும்பப் படித்துப் பார்!" என்று சொன்னானே—ஏழை வீட்டு ஏகாம்பரம்—அதைக் கேட்டு விட்டு புத்தகம் இருந்த இடம் நோக்கி ஓடினானே மோகன்—இதோ மேலே கண்ட அந்த இரண்டு வரிகள்தான் அதிலே காணப்பட்டன!"

என்ன இது புதிர்? இந்த இரு எழுத்துக்களுக்கு என்ன பொருள்? எனக்கும் இவைகளுக்கும் என்ன தொடர்பு? ஏகாம்பரம் ஏன் இப்படிச் சொன்னான்?

கையில் தமிழ்ப் புத்தகத்துடன் நின்ற மோகனின் மனதிலே இந்த கேள்விகள் எழுந்து எழுந்து அடங்கிக் கொண்டிருந்தன.

"என்ன மோகன், ஏன் இப்படி சிலை போலாகி விட்டாய்? அந்த ஏகாம்பரம் பயல் துஷ்டப் பயலாயிற்றே; உன் மனதையே குழப்பித் தொல்லை கொடுத்துவிட்டானே, தடியன்!"

—மோகன் திரும்பிப் பார்த்தான், பந்தாட்ட மைதானத்தில் பரிவுடன் பேசிக்கொண்டு அவனருகில் வந்தார்களே, அந்த நண்பர்கள் இருவரும் இப்போதும் அவன் பக்கத்தில் நின்றார்கள்.

"ராஸ்கல்! அவனுக்கு இதே தான்வேலை! எல்லோருக்கும் மத்தியில் அவமானப்படுத்திவிட்டானே! ஏதடா, ஜமீன்தார் மகனாயிற்றே—பணமும் பலமும் படைத்தவர்களாயிற்றே—நினைத்தால் எதையும் சாதித்துவிட முடியுமே—என்றாவது யோசித்தானா அந்த எத்தன்? பொருமை; அவ்வளவும் பொருமை! அதுதான் 'ஆண்டவன்' இப்படி 'அன்னக் காவடி' யாகப் படைத்து விட்டான்! மோகன்......நீ இதற்கெல்லாம் கவலையே படக்கூடாது!......"—இருவரில் மற்றவன் இப்படிப் பேசினான்.

மோகன் ஏதோ பேசாமல் நின்றான்.

"பாரடா! கஷ்டமே தெரியக் கூடாத முகத்திலே எவ்வளவு கவலை என்று!......மோகன், நீ இப்படி அழலாமா? உன் அருமை தெரியாது நடந்து கொள்கிறான் அந்த அயோக்கியன்! உன் காலடியில் கிடக்கவேண்டிய கழுதை தானே அவன்! நீ நினைத்தால், உன் அப்பா—ஜமீன்தாரிடம் சொன்னால் அந்தப் பயலின் நாக்கையே துண்டாக்கிப் போட்டுவிடலாமே!...... அதை விட்டுவிட்டு சீமான் மகனாகிய நீ இப்படி வருந்தலாமா?"—முதல்வன் மோகனின் முகத்தைப் பார்த்துக்கொண்டே பேசினான்.

அவன் சொல்வதும் உண்மை தானே! நான் ஏகாம்பரத்திடம் ஏன் சென்றேன்? எதற்காக ஆற்றங்கரைக்கு ஓடினேன்? அந்தச் சிறுவர்களோடு சேர்ந்து நானும் விளையாடலாம் என்ற எண்ணத்தினால் தானே! ஆனால் அவன் ஏன் என்னிடம் இப்படி எல்லாம் பேசுகிறான்? அவன் திமிர் பிடித்தவன் தான்; அயோக்கியன்தான்! அவனைச் சும்மாவிடத்தான் கூடாது!

மோகனின் மனதிலே இந்த எண்ணங்கள் அரும்பியபோது அவன் தன் அருகில் நின்ற நண்பர்களை ஆவலுடன் நோக்கினான். அவர்கள் அத்யந்த நண்பர்களாக இருக்கும்போது அப்புறம் என்ன குறை? ஏகாம்பரத்தையும், அவன் கூட்டத்தையுமே பார்த்து விடலாமே, ஒரு கை!

மோகனின் முகத்தில் நல்ல மாற்றம் கண்ட அந்த நண்பர்களும் சிரித்துக்கொண்டார்கள்.

"மோகன்! இன்றைக்கு நீரொம்பவும் கவலைப்பட்டுவிட்டாய்! வா, சினிமாவுக்குப் போகலாம்; அப்போதுதான் கவலையை மறக்கலாம்!" என்றான் ஒருவன்.

"என்ன, சினிமாவா? ஐயையோ! அப்பா திட்டுவாரே!" என்று பயந்தான் மோகன்.

"அப்பாவுக்குத் தெரிந்தால் தானே மோகன்! இன்றைக்குப் பள்ளிக்கு இன்ஸ்பெக்டர் வந்தார்; கூட்டம் போட்டு பேசினார்; இரவு இத்தனை நேரமாகிவிட்டது என்று சொன்னால் போயிற்று! அப்பப்பா!......நீ என்னப்பா சாதாரண குடிசை விட்டாரின் குமாரனா? நினைத்ததை எல்லாம் சாதிக்கலாமே!"

தூபம் பலன் தந்தது. ஏகாம்பரத்தைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்துவிட்டு, அந்த நண்பர்கள் புடைசூழ சினிமாக் கொட்டகை நோக்கி நடை கட்டினான் மோகன்!

மீண்டும் ஒரு நாள்......

எங்கேயோ சென்று விட்டு காரில் திரும்பிக்கொண்டிருந்தான் மோகன். ஊர்க் கோடியிலிருந்த மாந்தோப்பில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரமாகக் கேட்டது. காரை நிறுத்தச் சொன்னான். என்னவென்று பார்த்தான். ஏகாம்பரமும் நண்பர்களும்தான் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

கண் கட்டப்பட்ட சிறுவன் இரண்டு கைகளையும் விரித்து அங்கும் இங்கும் தேடி, வேறொருவனைப் பிடித்துவிட்டோம் என்று மரத்தைக் கட்டிப் பிடித்து ஏமாறும்போது எழும் மகிழ்ச்சி ஒலி மோகனை என்னவோ செய்தது.

அந்த இளம் உள்ளங்களில் பொங்கி வழியும் ஆனந்தம் ஏன் அவனுக்கு மட்டும் கிடைக்கவில்லை? அவன் நெஞ்சிலே ஏமாற்றம்!......ஒரே ஏமாற்றம்!

அவன் வேகமாகக் காரைவிட்டு இறங்கி தோப்பிற்குள் ஓடினான். ஏகாம்பரத்தைப் பார்த்தான்.

ஏகாம்பரமும் மோகனைப் பார்த்துவிட்டான். ஆனால் ஏன் அவன் மோகனையும் அன்போடு அழைத்து விளையாட்டில் சேர்த்துக்கொள்ள மறுக்கிறான்? துணை தேடி—அதன் மூலம் மகிழ்ச்சியைத் தேடித் தவிக்கும் அந்தப் பிஞ்சுநெஞ்சின் வேதனையைப் பைத்தியக்காரன், அவன் ஏன் இன்னும் உணரவில்லை?

"வாருங்கள், குட்டி ஜமீன்தார்! தமிழ்ப் புத்தகத்தில் நாற்பதாவது பக்கத்தில், ஏழு, எட்டாவது வரிகளைப் படித்தீர்களா?......"—என்றான் ஏகாம்பரம் மோகனைப் பார்த்து!

"ஏகாம்பரம்! நீ ஏன் என்னை இப்படி வதைக்கிறாய்? என்னையும் ஏன் விளையாடச் சேர்த்துக் கொள்ள மறுக்கிறாய்?........."—மோகன் கண்களில் நீர் கசிய இப்படிப் பேசிக் கொண்டே சென்றான்.

ஆனால் அவனது பேச்சைத் தடை செய்யும் வண்ணம் அங்கே அந்த இரு 'சினிமா' நண்பர்களும் தோன்றினார்கள்.

"இவன் சேர்த்துக்கொள்ளாவிட்டால் என்ன, நமது வீட்டுப் பசு பால் கறக்காமலா போய்விடும்? மோகன், கிடக்கிறான் கழுதை! நீ வா. இதைவிட அருமையான விளையாட்டைப் பார்க்கலாம் சர்க்கசில்!" என்றான் அவர்களில் ஒருவன்.

மோகனின் உள்ளத்திலே சிறிது மகிழ்ச்சி தோன்றியது! அதன் தொடர்ச்சியாக அன்று அப்பாவிடம் தேவையில்லாமல் போய் சொல்லி சர்க்கசுக்குச் சென்று விட்டான்.

கூடவந்த கொடிய நண்பர்கள் பேசாமல் சர்க்கசைப் பார்க்கவில்லை, ஏகாம்பரத்தைக் கொடியவனாக—அழிக்கப்பட வேண்டிய நச்சுப் பாம்பாக—அவன் நெஞ்சிலே உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

மோகன் நம்பினான். அதைமட்டுமல்ல; அவர்களையும் நம்பினான். அதன் விளைவாக தினம் தினம் வீட்டிலிருந்து பணம் எடுத்துவரு—சில நாட்கள் கேட்டும், பல நாட்கள் கேட்காமலும் கொண்டுவரத் தொடங்கினான். மேலும் ஒவ்வொரு நாளும் அவன் ஏகாம்பரத்தை அணுஅணுவாக வெறுத்துக்கொண்டும் வந்தான்!

இந்த வெறுப்பு மகிழ்ச்சியாக மாறும் நாள் ஒன்றும் விரைவில் வந்து சேர்ந்தது. ஏகாம்பரம்—மோகனின் ஒரே வைரி பள்ளிக்கூடத்தை விட்டுத் துறத்தப்பட்டான்! பிறகு என்ன? பள்ளிச் சம்பளம் கட்டாது அவன் வறுமை தடுத்ததென்றால், 'அவனை வெளியேற்றிவிட வேண்டும்' என்ற தலைமை ஆசிரியரின் அதிகார உத்திரவை எந்த சக்தி தடுத்து நிறுத்த முடியும்?

மோகனும் அவனைச் சேர்ந்த 'பணம் பறிக்கும்' நண்பர்களும் கைகொட்டிக் களித்துக் கொண்டிருக்கும்போதுதான், ஏகாம்பரம் விழிகளில் நீரை நிரப்பிக் கொண்டு ஜமீன்தாரின் வீட்டு வாசலில் வந்து நின்றான்.

அவனுக்கு அப்போது தேவையானது பள்ளிக்கூடப் படிப்பல்ல; அதற்கு சம்பளம் கட்டத் தேவையான பணமுமல்ல! அவனுக்குத் தேவை ஒரு வேலை! வறுமைப் புயலால் வதைபட்டுக் கொண்டிருக்கும் அவனது அம்மா, அப்பா—இவர்களைக் காப்பாற்ற மாடினும் கேடாக அவன் உழைக்கத் தயாராகி விட்டான்.

ஆனால் மோகனோ-இளைய ஜமீன்தாரோ ஏகாம்பரத்தின் உள்ளத்திலே சொல்லம்புகளைத் தொடுத்தான். 'நாய்' என்றான்; 'நயவஞ்சகன்' என்றான்; 'உனக்கு வேலை தந்தால் நாசம்தான்' என்றான்; 'பிழைக்க வழி இல்லை என்றால் சாவதற்குக்கூடவா வழி தெரியவில்லை?' என்று சீறினான்; வார்த்தைகளால் சித்திரவதை செய்து 'ஓடு கழுதை!' என்று விரட்டியடித்தான்!

அவனது அந்த மனிதத்தன்மை மறந்த-வயதுக்கு மீறிய கோரக் கூக்குரலுக்கு பக்கமேளம் கொட்டினார்கள், எப்போதும் 'அட்டை' போல் அவன் அருகிலேயே ஒட்டிக்கொண்டிருக்கும் உதவாக்கரை நண்பர்கள். ஆனால் பைத்தியக்காரர்கள், காலச்சக்கரத்தின் வேகச் சுழற்சியிலே கழனியும் காடாகும்; கல்லும் பொடியாகும் என்ற உண்மையை அவர்கள் உணராதது விசித்திரம்தான்!

★

இப்போதெல்லாம் ஏகாம்பரத்தை ஊரிலேயே சந்திக்க முடியவில்லை. அவன் எங்கு போனான்; என்ன ஆனான் என்று அக்கரையோடு விசாரிப்பவர்கள் இல்லையே தவிர, 'தொலைந்தான் சனியன்' என்று கையை உதறிக் கொண்ட 'உருவம்' ஒன்றுண்டு—

10-ம் பக்கம் பார்க்க

சோமனாதன்; சிறுகூடற்பட்டி

(?) நேரு தமிழ் நாட்டிற்கு இப்போது ஏன் வருகிறார்?

முன்பு புயல் வீசியபோது தமிழகத்தைத் திரும்பியும் பார்க்கவில்லை பண்டிதர்—ஆனால் இப்போது காஷ்மீரில் வெள்ளம் என்றதும் உடனே விமானத்தில் புறப்பட்டுச் சென்று, வானம் மந்தாரமாய் இருந்த காரணத்தால் விமானம் இறங்க முடியாததால், அதே விமானத்திலேயே திரும்பி இருக்கிறார். அதே போல் இருமுறை முயன்றும் அவரால் காஷ்மீரில் இறங்க முடியவில்லை. வான நிலை சரியான பிறகுதான் அவரால் அங்கு போக முடிந்தது!

இப்போது பண்டிதர் சென்னை வருவதுகூட தன்னுடைய 'காஷ்மீர்க் காதலை' எடுத்துச் சொல்வதற்காகத்தான் இருக்கும்.

வி. ராசமாணிக்கம்; விருதுநகர்

(?) தென்னாட்டிற்கு அரிசி 'சப்ளை' கிடையாது என்று சொல்லி விட்டார்களாமே—இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

இந்தியைத் திணித்து இந்திய உபகண்டம் முழுமைக்கும் ஒரே மொழியைப் புகுத்துவதைப் போலவே உணவு விஷயத்திலும் இந்த உபகண்டத்துப் பொது மக்களிடையே ஒரே உணவுப் பழக்கத்தை நிலைநாட்டக் கருதுகிறார்கள். அரிசி இல்லை என்று சொன்னால்தானே இங்கு கோதுமையைத் திணிக்க முடியும்? அதற்கான முதல் முயற்சிதான் இந்த அறிவிப்பாகும்!

எல். என். சாமியப்பன்; காரைக்குடி

(?) சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கு எங்களால்தான் முடியுமென்று கூறினாராமே; ஒரு அமைச்சர்—இதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?

முப்பாலிலே மூன்றாவது பாலான காமத்துப் பாலிலே ஒரு குறள் உண்டு—

"இருநோக்கு இவளுண்கண் உள்ளது; ஒரு நோக்கு
நோய் நோக்கு; ஒன்று அந்நோய் மருந்து"

—ஆசைக் காதலியின் ஒரு பார்வை காதலனுக்கு நோய் தருகிறதாம். ஆனால் அந்த நோய்க்கு மருந்து வேறு எந்த மருத்துவரிடமும் கிடைக்காதாம். அந்த மருந்து அவளது இன்னொரு பார்வையிலேயே தான் இருக்கிறதாம்!

தவறிப்போய் இதைப் படித்திருக்கும் அமைச்சர்தான் அதே பாணியில் காங்கிரஸ் கட்சியைக் காதலியாகப் பாவித்துக்கொண்டு பெயர் சூட்டும் விஷயத்தில் தமிழ்நாடு, சென்னை என்ற 'நோய்' கொண்டிருப்பதற்கு நாங்கள் தான் காரணம்; அந்த நோயைத் தீர்ப்பதும் எங்களால்தான் முடியுமென்றும், பேசியிருக்கிறார்.

பாவம், தங்களால் முடியும் என்று நினைப்பவர்கள் இது நாள்வரை செய்து முடிப்பதற்கென்ன?

இதுவரை காங்கிரஸ் என்னும் 'காதலி' பொது மக்கள் எனும் 'காதல'னுக்கு நோய் நீங்கும் மருந்தை வழங்காமல் இருப்பது காங்கிரஸ் 'காதல்' செய்யவில்லை; 'விபச்சாரம்' செய்கிறது; என்பதைத்தானே உணர்த்துகிறது!

ஆர். சுந்தரராசன்; அடியக்கமங்கலம்

(?) கோவில்களின் முக்கிய வருமானம் என்ன?

சில கோவில்கள் பக்தர்கள் காணிக்கையாகத் தந்த தலைமயிரையே நல்ல வருவாயாகக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, பழனி கோயிலுக்கு மட்டும் இந்தத் தலைமுடியைக் 'காண்ட்ராக்ட்' விடுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறதாம்!

மன்றல் அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 15—9—57 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி அளவில் எனக்கும் திரு. கஸ்தூரிராஜுவின் சகோதரி செல்வி, **சரசுவதி தேவிக்கும்** மணப்பாறையிலிருக்கும் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

அன்புள்ள,
எம். கிருஷ்ணன் பி. ஏ.,
பத்திரப் பதிவு அலுவலகம், மணவை

சாலிக்கரை
6—9—57.

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா 6—50
ஆறு மாதம் 4—00

வெளி நாடு

ஆண்டு சந்தா 7—50
ஆறு மாதம் 4—50

விற்பனையாளர்கட்கு!

அதிகப் பிரதிகள் கேட்கும் விற்பனையாளர்கள் தேவையான முன் பணத்தையும் 'ஆர்டருடன்' சேர்த்து அனுப்ப வேண்டும். இல்லையேல் அவர்களது கோரிக்கை கவனிக்கப்படமாட்டாது.

—நிர்வாகி.

எனது - நமது ...!

"எனது" என்ற வார்த்தையை உபயோகிப்பதில், மேலோட்டமாகத்தான் ஏதாவது நன்மையிருப்பதாகத் தோன்றுகிறது. கூர்ந்து நோக்கினால், தீமைகள்தான் அதிகம்.

கை வலித்தால், என் கை வலிக்கிறது என்கிறோம். தலையிடித்தால், என் தலை இடிக்கிறது என்கிறோம். கால் வலித்தால், என் கால் வலிக்கிறது என்கிறோம். இப்படியாக எது எது வலித்தாலும் அதை அதை 'என்'னது "என்"னது என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஆகவே இந்த "என்" என்றால் எது என்று நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது—அதே நேரத்தில், எல்லாம் சேர்ந்துதான் "என்" என்றும் உணர முடிகிறது. இதையெல்லாம் நோக்கும்போது இந்த 'என்' என்ற வார்த்தையும் அந்த 'ஓம்" என்ற வார்த்தையைப்போல வேலையும் மூளையும் இல்லாதவர்கள் சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய வெறும் வார்த்தைதான்—என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

மேலும், இந்த 'எனது' என்ற வார்த்தை நம்மை, நமது இந்த உலகத்திலிருந்து சற்று தூரத்தில் தள்ளி வைத்து விடுகிறது ஆனால் 'நமது" என்ற பொதுமைப் பதமோ நம்மை உலகத்தோடு ஐக்கியமாக்கி விடுகிறது.

உதாரணங்களாக சிலவற்றைச் சிந்திப்போம்:

"எனது, உனது"—என்ற பேத வார்த்தையை அடிக்கடி உபயோகித்துக் கொண்டிருக்கும் தம்பதிகளை என்றாவது ஒரு நாள் நிச்சயமாக நாம் "விவாகரத்து" ஆபீசிலே சந்திக்கலாம்.

எனது, உனது என்ற அதே பேத வார்த்தைகளை சதா பேசி, செயல் செய்துக்கொண்டிருக்கும் வெறும் பணக்காரர்கள், சுயமாகச் செத்துக்கொள்ளமாட்டார்கள். உணர்ச்சி மீறிய கட்சிகளோ அல்லது பேராசை பிடித்த மனிதர்களோதான் அவர்கள் சாவதற்கு உதவி புரியவேண்டும்.

இன்னும் பார்க்கலாம்.

எனது பேச்சு, எனது மூளை, எனது கருத்து, எனது தீர்க்கதரிசனம்—என்று மேடையேறிப் பேசிக் கொண்டிருந்த பேரறிவாளர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன்—கடைசியில் அவர்கள் தங்கள் கருத்துக்குத் தாங்களே கரகோஷம் செய்து கொள்ள வேண்டிய பரிதாப நிலைதான் ஏற்பட்டிருக்கிறது!

இன்னும் ஒரு உதாரணமாக, ஒரு நாடகக் கம்பெனியைப்பற்றிச் சிந்திப்போம்.

கம்பெனி முதலாளி, கம்பெனி வேலைக்காரர்களிடம் பேசும்போது, நமது கம்பெனி, நமது வருமானம், நமது வருங்காலம், நமது குறிக்கோள்—என்ற தோரணையில் பேசவாவது செய்யட்டும்—அந்தக் கம்பெனியில் சம்பளப் பிரச்சினை முதல் சகல பிரச்சினைகளும் அறைக்குள்தான் அடிபடுமே தவிர, அம்பலத்துக்கு வராது...!

அதே முதலாளி, இது எனது கம்பெனி, எனது வருமானம், எனது வருங்காலம், எனது குறிக்கோள்—என்ற தோரணையில் விளையாட்டுக்காகவேனும் பேசட்டும்—அந்தக் கம்பெனி கடைசியில் விளையாட்டாகவே மூடிந்து விடும்—அதை இழுத்துப் பூட்டக்கூட இன்னொருவன்தான் வர வேண்டும்!

மேலே காணப்படும் இந்த இரு தாரதம்யங்களுக்கும் காரணம், எனது நமது—என்ற இருவார்த்தைகளுக்கு இடையே இருக்கும் தாரதம்யம்தான்!"

—கலைவாணர் ('முரசொலி' பொங்கல் மலர், 1955

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை